வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 23.04.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 114 | பக்கங்கள் : 12




# இலங்கை - இந்தியா இடையே பாலத்துக்கான பணி ஆரம்பம்!

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 23

இலங்கை - இந்தியா இடையே பாலம் அமைப்பதற்கான பணியை நாம் ஆரம்பித்துள்ளோம். எங்களின் முயற்சி இரு நாடுகளின் வளர்ச்சியையும் வலுவூட்டும். இது நிச்சயம் ஒரு "கேம் சேஞ்சராக" இருக்கும் என்பதில் சந்தேகமில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா.

## இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு இன்று கூடுகின்றது

யாழ்ப்பாணம், ஏப். 23

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல் குழு இன்று கூடுகின்றது. எனினும், இன்றைய கூட்டத்தில் பல உறுப்பினர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்று தெரிய வருகின்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெறுவதாக இருந்தது. தமிழ் அரசுக் கட்சி தொடர்பில் திருகோணமலை நீதிமன்றில் நடக்கும் வழக்கு தொடர்பான விடயங்கள், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான விவகாரம் குறித்து இந்தக் கூட்டத்தில் பேசுவதாக இருந்தது.

ஆனால், அந்தக் கூட்டம் இறுதிநேரத்தில் இரத்தானது. இந்த நிலையில், (இன்று) செவ்வாய்க்கிழமை இந்தக் கூட்டம் 11

## சிறீ லங்கன் எயார் லைன்ஸை பெற 6 நிறுவனங்கள் விருப்பம்!

கொழும்பு, ஏப். 23

நாட்டின் தேசிய விமான சேவை நிறுவனமான சிறீ லங்கன் எயார் லைன்ஸை கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்த 6 முதலீட்டாளர்களின் விவரங்களை நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவன மறுசீரமைப்பு பிரிவு நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி, எயார் ஏசியா கன்சல்டிங், தர்ஷான் எலைட் இன்வெஸ்ட்மன்ட், எவ். ஐ. ரி. எஸ் ஏவியேசன் லிமிற்றட், ஷெரிஷா ரெக்னோலஜி பிறைவேட் லிமிற்றட், ட்ரெசர் றீ பப்ளிக் கார்டியன்ஸ், ஹேலிஸ் பிறைவேட் லிமிற்றட் ஆகிய நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன. 11

## ஈரானிய ஜனாதிபதி இலங்கை வருகிறார்!

கொழும்பு, ஏப். 23

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை நாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

இஸ்ரேல்-ஈரான் இடையேயான போர்ப் பதற்றத்தை அடுத்து ஈரான் ஜனாதிபதியின் இலங்கைப் பயணம் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாளை இலங்கைக்கு பயணம் மேற்கொள்கிறார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை திறந்துவைப்பதற்காகவே ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

514 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 11

## தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் கட்சி மத்திய குழுவே தீர்மானிக்கும்!

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும், பொது வேட்பாளர் தொடர்பில் ஆரம்பகட்ட பேச்சு நடைபெறும். பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதால் ஏற்படும் சாதக - பாதகங்கள் தொடர்பில் அனைத்தையும் ஆராய்ந்து ஒரு சரியான முடிவை எடுப்போம். தமிழ் அரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிப்போம்" 11

## சுதந்திரம் குறித்த மதிப்பீடு; இலங்கைக்கு 54 புள்ளிகள்!

கொழும்பு, ஏப். 23

இலங்கையின் சுதந்திரம் குறித்த நிலவரத்துக்கு 100இற்கு 54 புள்ளிகள் வழங்கியள்ளது அமெரிக்காவின் "ப்றீடம் ஹவுஸ்" எனும் சர்வதேச அமைப்பு.

உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் - ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் "ப்றீடம் ஹவுஸ்" உலக நாடுகளின் சுதந்திரம் தொடர்பான அதன் மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், இலங்கையில் விரும்பிய மதம் மற்றும் நம்பிக்கையை பின்பற்றுவதற்கான சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஊடக சுதந்திரம் 11

## எம். பி. பதவியை விஜயதாஸ இழக்க நேரிடும்

### பெரமுன எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக பதவியேற்ற நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பெரமுன கட்சியின் யாப்பின் பிரகாரம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க 11

## 'சிறீ இராமாயண பாதை' யாத்திரை திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 23

"சிறீ இராமாயண பாதை" யாத்திரை திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய சமய மற்றும் கலாசார இணைப்பில் புதிய அத்தியாயத்தை குறிக்கும் வகையில் மற்றும் நாட்டில் 11




## பிணை முறியாளர்களுடனான அரசாங்கத்தின் பேச்சு தோல்வி!

### உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, ஏப். 23

வெளிநாட்டு அரசு முறை கடன்களுக்காகச் சர்வதேச பிணைமுறியாளர்களுடன் அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுகள் தோல்வி அடைந்துள்ளன என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம். பி. கூறியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை கடன் மறுசீரமைப்பு விவகாரத்தை அரசாங்கம் இழுத்தடிக்கும் என்றும் அவர் கூறினார். 11

## பெரும்போக காலத்தில் 71 வீத பயிர்கள் அழிவு!

### விவசாய திணைக்களம்

கொழும்பு, ஏப். 23

பெரும்போக பயிர் செய்கையில் அதிக மழை மற்றும் வெள்ளத்தால் நெல் தவிர்ந்த 71 வீதமான பயிர்களின் அறுவடைகள் அழிவடைந்தன என்று விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2023-24ஆம் ஆண்டில் நாட்டில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தால் மரக்கறி பயிர் மற்றும் பிறபயிர்கள் பயிரிடப்பட்ட 11

## காலநிலைசார் சவாலுக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளது!

### உலக உணவுத் திட்டம்

கொழும்பு, ஏப். 23

இலங்கை தற்போது காலநிலைசார் சவால்களுக்கும் முகங்கொடுத்து வருகிறது. அதிகரித்துவரும் வெப்ப நிலையும், மிகையான உஷ்ணமும் மக்களின் உடல் ஆரோக்கியத்துக்கும் வாழ்க்கைத் தரத்துக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது என்று உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டு வட்டுக்கோட்டையில் "தமிழீழமே தமிழர் பிரச்னைக்கு தீர்வு" என்று பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்தில் நடந்த மே தினக் கூட்டம் பழையவர்களுக்கு இப்போதும் நினைவில் இருக்கலாம்.

மிகப்பிரமாண்டமான முறையில் பல ஊர்தி பவனிகளுடன் நடந்த அந்த மே தினக் கூட்டத்தில் பேசிய தலைவர்கள் பலரும் "அடுத்த மே தினத்தை தமிழீழத்தில் கொண்டாடுவோம்" என்று பிரகடனம் செய்தனர். ஆனால், அப்படி அடுத்த மே தினத்தில் தமிழீழம் கிடைக்கப் போவதில்லை என்பது அங்கே பேசியவர்களுக்குத் தெரியாமல் இருந்தது என்பதல்ல. ஒரு நம்பிக்கையை வளர்ப்பதற்காக கூறப்பட்டதுதான்.

அந்த மேடையில் கலந்து கொண்ட இளைஞர்கள் பலரும் உணர்ச்சி பொங்க உரையாற்றினர். தலைவர்களுக்கு இளைஞர்கள் தமது கைகளை வெட்டி இரத்தத்திலகம் இட்டனர். பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, அமோக வெற்றிபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மறுபுறத்தே ஜே. ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஐந்தில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது. சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்ததால் கூட்டணி பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி ஸ்தானத்தில் அமரமுடிந்தது. அந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்துக்கான மக்கள் கருத்தறியும் கருத்துக்கணிப்பாக அந்தத் தேர்தலை எதிர்கொண்டதும் மக்கள் அந்தக் கோரிக்கைக்கு அங்கீகாரம் கொடுத்ததும் பழைய சங்கதிகள்தான்.

ஆனால், எழுபத்தியேழில் வெற்றிபெற்ற அனைத்து எம்.பிக்களுக்கும் புதிய ஜீப் வண்டிகளை வழங்கியது ஜே. ஆர். அரசு. நமது கூட்டணி எம்.பிக்களுக்கும்தான்.

கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் நடந்த மே தினக்கூட்டத்தில் அடுத்த மே தினத்தை தமிழீழத்தில் கொண்டாடுவோம் என்றபோது மகிழ்ச்சி ஆரவாரத்தில் துள்ளிக்குதித்த அதே இளைஞர்களே, பிற்காலத்தில், "கேட்டது தமிழீழம் கிடைத்தது ஜீப் வண்டிகள்" என்று கூட்டணியினரை விமர்சித்ததும் பின்னர், அவர்கள் ஆயுதப் போராட்ட இயக்கங்களை தொடங்கியதும் நடந்து முடிந்தவை.

நடக்கவிருக்கும் மே தினக் கூட்டங்கள் பற்றி எழுத நினைத்தபோது இந்தக் கூட்டணியின் முதலாவது மே தினக்கூட்டம் ஞாபகத்தில் வருவதைத் தவிர்க்கமுடியவில்லை.

தெற்கில் நடக்கவிருக்கும் மே தினக் கூட்டங்கள், அடுத்து வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் கட்சிகளின் பலத்தை நாட்டுக்கும் வாக்காளர்களுக்கும் காட்டுகின்ற மே தினக் கூட்டங்களாக இருக்கப்போகின்றன என்று இந்தப் பத்தியில் சில நாட்களுக்கு முன்னர் எழுதியிருந்தேன். தெற்கில் அரசியல் பற்றி யாருடன் பேசினாலும் மே தினத்துக்கு பின்னர் பேசுவோமே என்றே கூறுகின்றனர். அந்தளவுக்கு நடக்கவிருக்கும் மே தினக் கூட்டங்கள் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

தெற்கில்தான் மே தினக் கூட்டங்களின்மீது மக்களின் கவனம் திரும்பியிருக்கின்றது என்றால், இப்போது அதே போன்ற ஒரு கவனம் கிளிநொச்சியில் நடக்கவிருக்கும் தமிழ்த் தேசிய மே தினத்தின் மீதும் திரும்பியிருக்கின்றது.

நேற்று இந்த ஊர்க்குருவியுடன் பேசிய தமிழ் அரசியல் தலைவர் ஒருவர், "நான் அடுத்த வாரம் கிளிநொச்சி வருகின்றேன். உங்களையும் சந்திக்கலாம்" என்றார். அப்போதுதான், எதற்காக வருகிறார் என்ற விபரத்தையும் சொன்னார். "கிளிநொச்சியில் சிறீதரன் எம்.பி. ஏற்பாடு செய்திருக்கும் மே தினக் கூட்டத்துக்காக வருகின்றேன்" என்றபோதுதான், வழக்கமாக கிளிநொச்சியில் அவர் நடத்தும், மே தினக் கூட்டம் இந்தத் தடவை பல தலைவர்களின் பங்களிப்புடன் நடக்கவிருப்பதை அறிய முடிந்தது.

சிறீதரன் எம்.பி., தமிழ் அரசு கட்சியின் தலைவராக பெரு வெற்றியுடன் வெற்றிபெற்றிருந்த போதிலும், இன்றுவரை அந்தப் பதவியில் அமர அவரால் முடியவில்லை.

இந்த நிலையில், வழக்கமாக அவர் கிளிநொச்சியில் வருடாவருடம் நடத்துகின்ற மே தினக் கூட்டத்தை இந்தத் தடவை மிகப்பெரிய அளவில் நடத்துவதற்கு அவர் ஆயத்தங்கள் செய்வது தெரிகின்றது.

மே தினம் தெற்கில் மாத்திரமல்ல, வடக்கிலும்தான் இப்போது பலரின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

**ஊர்க்குருவி**

# சமூக பொலிஸ் குழு அமைக்காத அதிகாரிகளின்மீது நடவடிக்கை!

### அமைச்சர் டிரான் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23

சமூக பொலிஸ் குழுக்களை அமைக்காத அதிகாரிகள் மீது மே 31ஆம் திகதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமூக பொலிஸ் குழு தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் சமூக பொலிஸ் குழுக்களை நியமிப்பதன் உண்மையான நோக்கம் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு மக்களை ஒன்றுசேர்ப்பதாகும் - என்றார்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட பொலிஸ் மா அதிபர் தேஸ்பந்து தென்னக்கோன், இந்த சமூக பொலிஸ் குழுக்களை ஸ்தாபிப்பதன் ஊடாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆதரவை கிராம மட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

மேலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நல்ல குழுவை அமைக்க அறிவுறுத்தியுள்ளதாகவும், இலங்கையில் உள்ள 14,022 கிராம அதிகாரிகளும் இந்த குழு முறையை ஏற்றுக் கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# திருட்டு, கொள்ளை செயல்களை தடுக்க பொலிஸ் குழு அமைப்பு!

கொழும்பு, ஏப். 23

மேல் மாகாணத்தில் இடம்பெறும் திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்காக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆலோசனையில் விசேட பொலிஸ் சைக்கிள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே 1ஆம் திகதியிலிருந்து இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் பிரிவுகளில் பதிவாகும் திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்கள் அதிகம் இடம்பெறும் இடங்களை இலக்கு வைத்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் மே மாதத்திலிருந்து மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கிய பகுதிகளில் இடம்பெறும் திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்களை ஒழிப்பதற்கான செயல்திட்டங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காக அனைத்து பொலிஸ் பிரிவுகளிலிருந்தும் நூற்றுக்கு அறுபது வீதமான பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துமாறு பொலிஸ் மா அதிபர் மேலும் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# பொலிஸார் போன்று நடித்து நகைகள், பணம் கொள்ளை!

கொழும்பு, ஏப். 23

பொலிஸார் என்று தம்மை அடையாளப்படுத்தி வீட்டுக்குள் நுழைந்தவர்கள், அங்கிருந்தவர்களை அறை ஒன்றுக்குள் பூட்டிவிட்டு நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையிட்டு சென்றனர்.

இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட 90 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொள்ளைச் சம்பவம், நாவற்காடு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தக் கொள்ளை சம்பவத்தில் வீட்டின் உரிமையாளர் அவரின் மனைவி தாய் மற்றும் 3 மகள்கள் இருந்தனர் என்று பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் சீருடையை ஒத்த உடையுடன் வந்தவர்களே இந்தக் கொள்ளைச் சம்பவத்தை செய்துவிட்டு தப்பித்துள்ளனர். நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஏப். 23

ஓட்டோ - வான் - மோட்டார் சைக்கிள் என மூன்று வாகனங்கள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், துரைசாமி லலிதராசா என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பாடசாலை அருகே இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர். இருவரும் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஒருவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். ஆனால், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி மரணமானார்.

விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாடக ஆற்றுகையும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஏப். 23

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "சத்திய சோதனை" நாடக ஆற்றுகையும் கலந்துரையாடலும் நாளை மறுநாள் வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவிலிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "சத்திய சோதனை" நாடகம் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலை துறையின் தயாரிப்பில் பேராசிரியர் சி. ஜெய்சங்கர் நெறியாள்கையில் உருவாகியுள்ளது.

இந்த நாடகம் நடைமுறைக் கல்வி பற்றிய கேள்வியையும் பொருத்தமான கல்வி முறையின் தேவை பற்றியும் உரையாடலைத் தூண்டுவதாக அமைகிறது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.04.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், சித்திரை22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தரைவழிப் பாதை

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான தரைவழிப் பாதையை அமைக்கும் நடவடிக்கைகளில் இரு நாடுகளும் ஈடுபட்டுள்ளன என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலமொன்று இருந்தது என்னும் புராணிக கதையுண்டு. அதை இராமர் கட்டியதான நம்பிக்கை உண்டு. ஆனால், விஞ்ஞானரீதியான ஆய்வுகளின்படி ஆரம்பத்தில் கடலுக்கு மேல் தெரியக்கூடியவாறான தரைவழித் தொடர்பு இருந்திருக்கின்றது - அதுவே பின்னர், இயற்கையான மாற்றங்களால் கடலுக்குள் சென்றுவிட்டதாகக் கணிக்கப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கையையும் இந்தியாவையும் தரைவழியாகத் தொடர்புபடுத்தும் விடயம் தொடர்பில் பலவாறான முரண்பாடான கருத்துகள் உண்டு. ஆனால், அனைத்துக்கும் அப்பால் அவ்வாறானதொரு தொடர்பு இருந்திருக்கின்றது என்பதற்கு விஞ்ஞானபூர்வமான சான்றுகள் இருக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாலம் அமைக்கும் திட்டம் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, தனது புதுடில்லிக்கான முதல் பயணத்தின்போது ரணில் விக்கிரமசிங்க குறித்த பாலம் தொடர்பில் பேசியிருந்தார். அரசாங்கம் அவ்வாறானதொரு பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பில் ஆர்வம் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். ரணில் இதனை முதன்முதலாக இப்போது கூறவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்துக்குமான சமாதான உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர், 2002 ஜூனில் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு பயணம் செய்திருந்தார். அப்போதும் இது தொடர்பில் பேசியிருந்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான பாலம் நிர்மாணிப்பதற்கான ஆரம்பகட்ட ஆய்வுகள் முடிந்துவிட்டன என்றும் இந்திய திட்டக் குழு மற்றும் இலங்கையின் கொள்கை மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களுக்கு அமைவாகத் தனியார் துறை நிபுணத்துவம் மற்றும் முதலீடுகளை உள்வாங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வறிக்கையை தயாரிப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இரண்டு தரப்புகளும் இணங்குகின்றன எனவும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அவற்றை முன்னெடுப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இருக்கவில்லை. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

ரணிலின் வாழ்வில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான இறுதி சந்தர்ப்பமாக அமையப்போகும் 2024 ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றிபெறுவாரா அல்லது முன்னரைப் போன்று இறுதி நேரத்தில் தோற்கடிக்கப்படுவாரா என்னும் கேள்விகளுக்கு மத்தியில்தான் தரை வழித் தொடர்பை ஏற்படுத்தும் திட்டத்தில் ரணில் தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றார். 2002இல் ரணில் முன்மொழிந்த விடயத்தை இன்றுவரையில் முன்னெடுக்க முடியவில்லை இவ்வாறானதொரு பின்னணியில் மீண்டும் தரைவழித் தொடர்பு பற்றிய நம்பிக்கைகள் மேலோங்கியிருக்கின்றன.

சிங்கள கடும்போக்கு தரப்புகளின் அச்சங்களை மீறி இதனை சாத்தியப்படுத்தத் தன்னால் முடியுமென்று ரணில் நம்புகின்றாரா? - ரணிலால் இதனை சாத்தியப்படுத்த முடியுமென்று இந்தியா நம்புகின்றதா? பதில்களை கண்டுபிடிப்பது கடினமானது. ஆனால், அவ்வாறானதொரு தரைவழித் தொடர்பு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கட்டாயம் தேவையானது. இதனால், அதிகம் இலங்கைக்கே நன்மை உண்டு. அவ்வாறான தரைவழித் தொடர்பு இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கையை கொண்டு சென்றுவிடும் என்பவர்கள் உள்ளனர். இலங்கையின் பொருளாதாரம் முற்றிலும் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும் என்போரும் உள்ளனர். ஆனால், இவ்வாறான வாதங்கள் தர்க்க ரீதியில் பலவீனமானவை. ஏனெனில், இப்போது தரைவழித் தொடர்பில்லை. ஆனாலும், இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில்தானே கிடக்கின்றது. இந்த நிலையில் சுயாதீனமாக பொருளாதார ரீதியில் எழுச்சியுற முடியாத இலங்கை பொருளாதார நிலையில் பெரும் எழுச்சியடைந்துவரும் - இன்னும் சில வருடங்களில் உலகின் மூன்றாம் நிலை பொருளாதார சக்தியாக எழுச்சியுறப் போகும் இந்தியாவுடன் இணைந்து நின்றால் நன்மையை இலங்கை மக்கள்தான் அறுவடை செய்வர்.

# புத்தாண்டு மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்ற சிறுவன் திடீர் உயிரிழப்பு!

*கொழும்பு, ஏப். 23*

*புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட சிறுவன் திடீரென சுகயீனமுற்று கால்வாயில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக கிரிஉல்ல பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவர் வெத்தெவ அமரகொட பிரதேசத்தைச் சேர்ந்த ரவிந்து டில்ஷான் என்ற 17 வயது இளைஞராவார்.*

*இவர் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்ற இருந்தவர் என தெரிய வந்துள்ளது.*

*வெத்தெவ பகுதியில் புத்தாண்டை முன்னிட்டு நேற்று முன் தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மரதன் ஓட்ட போட்டியில் கலந்துகொண்ட இவர் போட்டி முடிவடைவதற்கு 500 மீற்றர் தூரம் இருக்கும்போது திடீரென சுகயீனமுற்று அருகிலிருந்த கால்வாயில் தவறி வீழ்ந்துள்ளார்.*

*குறித்த போட்டி இடம்பெற்ற பகுதியில் கடும் வெப்பநிலை காணப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.* (அ)

# களனி ஆற்றில் ஆணின் சடலம்!

*கொழும்பு, ஏப். 23*

*பேலியகொடை பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் களனி ஆற்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பேலியகொடை பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவர் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படாத நிலையில் உயிரிழந்தவர் 45 முதல் 50 வயதுக்குட்பட்டவர் என பொலிஸார் கூறினர்.*

*இவர் சாம்பர் நிற சட்டையும் பச்சை மற்றும் மஞ்சள் நிற வேட்டியும் அணிந்துள்ள நிலையில் உயிரிழந்தவரது முகம் அழுகி இருப்பதால் அவரை அடையாளம் காண முடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*(அ)

# நெல் மூடைகள் திருடிய மூவர் கைது!

*கொழும்பு, ஏப். 24*

*ஹிங்குராகொடை பகுதியில் இரண்டு வீடுகளுக்கு வெளியே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 14 நெல் மூட்டைகளைத் திருடிய மூவர் நெல்லுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் .*

*கைது செய்யப்பட்ட இருவர் கிரித்தல பூரணகம பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் மற்றொருவர் ஹிங்குராகொடை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் ஹிங்குராகொடை பொலிஸார் தெரிவித்தனர் .*

*சந்தேகநபர்கள் 20, 21 மற்றும் 23 வயதுடையவர்கள் என்பதுடன் நெல் ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட லொறியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*தேங்காய் மட்டைகளை சேகரிக்கும் போர்வையில் வீடுகளுக்குச் சென்ற இவர்கள் சாக்குகளில் பொதி செய்யப்பட்டிருந்த பதுக்கி பதினான்கு நெல் மூட்டைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.*

*திருடப்பட்ட நெல் மூட்டைகளின் பெறுமதி 103,000 ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.*

(அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் ஐவர் கைது!

*கொழும்பு, ஏப். 23*

*650 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*


*கொழும்பு - பத்தரமுல்லை பகுதியில் விடுதியொன்றில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்த சந்தேகநபர்கள் கைதாகினர்.*

*கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்களும் அடங்குவர். இவர்கள் நீர்கொழும்பு மற்றும் கட்டான பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் ஏனைய மூன்று சந்தேகநபர்களும் கொழும்பு மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*சந்தேக நபர்கள் போதைப்பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக தலங்கமை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.*

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**இடபம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**

கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கடகம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறையும். பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**துலாம்**

கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**தனுசு**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**மீனம்**

எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

# கோவை உள்ளிட்ட தொகுதிகளில் மறுவாக்கு பதிவு நடத்த வேண்டும்

## பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்துகிறது

சென்னை, ஏப். 23

கோவை உட்பட வாக்காளர் பட்டியலில் ஏராளமானவர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் மீண்டும் வாக்குப் பதிவு நடத்த வேண்டும் என பா. ஜ.க. மாநில செய்தி தொடர்பாளர் ஏ. என். எஸ். பிரசாத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் கடந்த 19ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற்றது. இந்த நிலையிலேயே பா. ஜ. க. விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

கோவை உள்ளிட்ட தொகுதிகளில் தேர்தலுக்கு முன்பே திட்டமிட்டு தங்களுக்கு வேண்டிய அதிகாரிகளை மாவட்ட ஆட்சியர்களாக தி. மு. க. நியமித்துள்ளது. இதனால் தமிழகத்தில் நியாயமான வெளிப்படையான நேர்மையான தேர்தல் நடைபெறவில்லை. தி. மு. கவினர் தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி - தமக்கு சாதகமான அதிகாரிகள் மூலம் பா. ஜ. கவுக்கு வாக்களிக்கக்கூடியவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது பல தொகுதிகளில் தொகுதிக்கு தலா ஒரு லட்சம் வாக்குகள் வீதம் நீக்கப்பட்டுள்ளன.

ஜனநாயகத்தின் மீதும் மக்களின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள் தேர்தலை நேர்மையான முறையில் எதிர்கொள்வார்கள். ஆனால், மக்களின் மீது நம்பிக்கை அற்றவர்கள் தான் குறுக்கு வழியில் வெற்றி பெற நினைப்பார்கள். அதைத் தான் தி. மு. க. செய்திருக்கிறது. எந்தெந்தத் தொகுதிகளில் வாக்காளர்கள் நீக்கப்பட்டார்களோ அங்கெல்லாம் மீண்டும் வாக்குப்பதிவு நடத்தவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# போதைப்பொருள் மையமாக தமிழ்நாடு மாறி வருகின்றது!

## பா. ம.க., தே. மு. தி. க. குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 23

போதைப் பொருட்களின் கடத்தல் மையமாக தமிழகம் மாறி வருவதாக பா. ம. க. தலைவர் அன்புமணி, தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

"தமிழகம் முழுவதுமே கஞ்சா, அபின், ஹெராயின், கொக்கைன் என அனைத்து வகையான போதைப் பொருட்களும் 24 மணி நேரமும் கிடைக்கின்றன. உலக அளவிலான போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் மையமாக தமிழகம் மாறி வருகிறது. தமிழக அரசு இனியாவது தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.", என்று அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதேபோன்று, " சென்னையில் கஞ்சா மற்றும் போதை ஆசாமிகள் பொலிஸாரை பொது வெளியில் தாக்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. உடனடியாக ஆளும் அரசு இரும்புக்கரம் கொண்டு கஞ்சா போதையை தடுத்து சட்டம் ஒழுங்கை காக்க வேண்டும்", என்று பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

# தி. மு. கவின் சர்வாதிகாரம் ஜனநாயகத்துக்கு ஆபத்து!

## அண்ணாமலை சொல்கிறார்

சென்னை, ஏப். 23

"தி.மு.க.,வின் சர்வாதிகாரப் போக்கு, ஜனநாயகத்துக்கு மிகுந்த ஆபத்தானது" என, பாரதிய ஜனதாக கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கடலூரில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார். தி. மு. கவுக்கு வாக்களிக்கவில்லை என்பதால் அவர் அந்தக் கட்சியினரால் அடித்துக் கொல்லப்பட்டார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தக் குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட தி.மு.கவினர் இன்னும் கைது செய்யவில்லை.

தி.மு.கவின் இந்த சர்வாதிகார போக்கு, ஜனநாயகத்துக்கு மிகுந்த ஆபத்தானது. இந்தியாவை காப்பாற்றப் போவதாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின், முதலில் தன் கட்சிக்காரர்களிடம் இருந்து, தமிழக மக்களை காப்பாற்றும் வேலையைப் பார்க்க வேண்டும் - என்றார். (ஐ)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2 தொன் பீடி இலைகள் பிடிபட்டன!

தூத்துக்குடி, ஏப். 23

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2 தொன் பீடி இலைகள் தூத்துக்குடியில் பிடிபட்டன. இது தொடர்பில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி - காயல்பட்டினம் பகுதியில் போதைப் பொருட்கள் கடத்தப்படுகிறது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து நேற்று பொலிஸார் அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது, அதிகாலை 3.30 மணியளவில் கடற்கரையில் நால்வர் பொதிகளுடன் காவல் இருப்பதை கண்டனர். அவர்களை பிடிக்க முயன்றபோது ஒருவர் பிடிபட ஏனைய மூவர் தப்பிச் சென்றனர்.

கைப்பற்றப்பட்ட 50 மூடைகளில் 2 தொன் பீடி இலைகள் இருப்பது தெரிய வந்தது.

இது தொடர்பில் பிடிபட்ட நபரிடம் விசாரணை நடத்தப்படுகின்றது. (ஐ)

# சி. ஏ. ஏ. சட்டத்தை காங்கிரஸ் நீக்கும்

## சிதம்பரம் அறிக்கை



சென்னை, ஏப். 23

காங்கிரஸின் மக்களவைத் தேர்தல் அறிக்கையில் குடியுரிமை திருத்தச் சட்டம் (சி. ஏ. ஏ.) குறித்து எந்த வாக்குறுதியும் இடம்பெறாத நிலையில், மத்தியில் 'இந்தியா' கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அந்தச் சட்டம் நீக்கப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளர்.

காங்கிரஸின் தேர்தல் அறிக்கை மிக நீளமாக இருந்ததால், அதில் சி. ஏ. ஏ. குறித்த வாக்குறுதி இடம்பெறவில்லை. எனினும் அந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பதே காங்கிரஸின் நோக்கம்.

பா. ஜ. க. ஆட்சியில் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றில் 5 சட்டங்கள் முற்றிலும் நீக்கப்படும். மத்தியில் 'இந்தியா' கூட்டணி ஆட்சி அமைத்தால், நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரில் சிஏஏ ரத்து செய்யப்படும் - என்றார். (ஐ)

# மொட்டு சின்னத்தில் ரணில் போட்டியிடார்!

## ஆசு மாரசிங்க தகவல்

கொழும்பு, ஏப். 23

**அனைத்து தரப்புகளையும் இணைத்துக்கொண்டே ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் எனவும், பொதுச் சின்னமாக மொட்டுச் சின்னம் அமையாது எனவும் ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆசு மாரசிங்க தெரிவித்தார்.**



ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தை கைவிட்டுள்ளது என முன்வைக்கப்பட்டுவரும் விமர்சனங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

யானைச் சின்னமே ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னம், அதனை நாம் கைவிடவில்லை. யானைச் சின்னத்தின்கீழ் ஐ.தே.கவின் பயணம் தொடரும். எனினும், ஜனாதிபதித் தேர்தலில் தேசிய பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். அதற்காக பொதுச் சின்னமொன்று அவசியம் எனக் கூறப்படுகின்றது. எனினும், அந்த பொதுச் சின்னம் மொட்டு கட்சியாக அமையாது.

அதேபோல அனைத்து தரப்பினரையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதற்கே ஜனாதிபதி முயற்சிக்கின்றார்-என்றார். (அ)



# மர ஆலையொன்றில் தீ!

கொழும்பு, ஏப். 23

பன்னிப்பிட்டிய, லியனகொட பிரதேசத்தில் உள்ள மர ஆலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் மரம் அறுக்கும் ஆலை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது

அதன்படி நேற்று திங்கட்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் தீ பரவியதுடன், பிரதேசவாசிகள் மற்றும் நகரசபையின் மூன்று தீயணைப்பு வாகனங்கள் மற்றும் தெஹிவளை நகரசபையின் நீர் பீரங்கிகளின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தம் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனவும் இதன்போது உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# ஆள்பதிவுத் திணைக்கள அலுவலகம் நுவரெலியாவில் நேற்று திறந்துவைப்பு

கொழும்பு, ஏப். 23

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக நுவரெலியா மாவட்ட ஆட்பதிவு திணைக்களத்தின் காரியாலயம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை காலை 11 மணியளவில் நுவரெலியா லேடி மெக்லம் டிரைவ் பகுதியில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் திறந்து வைத்தார்.

இதன்போது நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன் சீ.பி.ரட்ணாயக்க, மருதுபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ்நாடு பேச்சாளர் சிறப்புப் பேச்சு!

யாழ்ப்பானம், ஏப். 23

தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு. சின்னப்பன் ஆசிரியர் கல்வியின் சமகால செல்நெறி என்ற பொருளில் அமைந்த அதிதி பேச்சாளர் சிறப்புரை நேற்றுக் காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றது.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை பிரதி அதிபர் க. செந்தில்குமரன் நெறிப்படுத்தினார்.

நிகழ்வில் அறிமுக உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா நிகழ்த்தினார்.

கலாசாலையின் பிரதி அதிபர் தங்கராசா கோபாலகிருஷ்ணன் நன்றி உரை வழங்கினார்.




அதிதி உரையாற்றிய பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன், ஆசிரியர் தொழிலில் சிறப்பு, ஆசிரியர்களுக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய உயர் கல்வி வாய்ப்புகள் குறிப்பாக முனைவர் பட்டம் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் இலங்கையில் இருந்தவாறு தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் இணையவழியில் கற்றுச்சான்றிதழ் பெறுவோரின் பட்டத்திற்கான செல்லுபடித்தன்மை பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்கினார். (அ)

# ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணம் நாளை பாராளுமன்றில் விளக்கமளிப்பு

கொழும்பு, ஏப். 23

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கலந்து கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்களுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் செலவுகள் தொடர்பான விடயம் நாளை நடைபெறவுள்ள பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஜனாதிபதி பங்கேற்ற வெளிநாட்டுப் பயணங்கள், ஒவ்வொரு பயணத்தின்போதும் சந்தித்த வெளிநாட்டுத் தலைவர்கள் குறித்தும், அவர்களுடன் இராஜதந்திர ரீதியில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அந்த உடன்படிக்கைகளை எட்டுவது தொடர்பிலும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திலும் ஜனாதிபதியுடன் பங்குபற்றிய தூதுக்குழுவினர்களுக்கு செலவிடப்பட்ட தொகை குறித்தும் விளக்கமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட சபை உறுப்பினர் ஜயந்த சமரவீர, பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் இக்கேள்விகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டோ சாரதிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23

கையடக்கத் தொலைபேசி மூலம் கட்டணம் வசூலிக்கும் ஓட்டோச் சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இந்த சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும், போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகளில் கட்டணத்தை காட்டும் மீற்றர் பொருத்தப்பட வேண்டும் எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மட்டும் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டி சாரதிகள் கையடக்கத் தொலைபேசிகள் மூலம் கட்டணங்களை வசூலித்தால் அது தொடர்பான முறைப்பாடுகளை 0112860860 என்ற இலக்கத்திற்கு அறிவிக்குமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடந்த 5 வருட காலப் பகுதியில் 25,000 பேர் இராணுவ சேவைக்கு சமுகமளிக்கவில்லை!

கொழும்பு, ஏப். 23

கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் சுமார் 25,000 பேர் இராணுவ சேவைக்கு சமூகமளிக்கவில்லை எனவும், விடுமுறை பெறாத நிலையிலேயே அவர்கள் சென்றுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கடந்த காலங்களில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் மக்களைக் கொலை செய்வதற்காக, துப்பாக்கி ஏந்தியவர்களாகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் எதுவித அறிவித்தலுமின்றி சேவைக்கு திரம்பாத இராணுவத்தினர் என்றும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இராணுவத்தினர் மற்றும் ஏனைய படையினர் பாதாள உலக குற்றச் செயல்களில் ஈடுபடுவது மற்றும் அவர்கள் பிரசன்னம் தொடர்பாக இராணுவ பொலிஸார் தற்போது விழிப்புணர்வு விரிவுரைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# கால்நடை பதிவை கட்டாயமாக்கவும்!

## வடக்கு மாகாண ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

**வடக்கு மாகாணத்தில் கால்நடைகள் திருடப்படுவதைத் தடுக்கும் வகையில் அனைத்து கால்நடைகளையும் பதிவு செய்யும் நடவடிக்கையைக் கட்டாயமாக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.**



கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் பதிவாகின்றமையை கருத்திற்கொண்டு ஆளுநர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

கால்நடைகளை வளர்ப்போர் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் எனவும், வெளிவட்டங்களுக்குக் கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை வழங்கும் போது உரியச் சட்ட விதிகளை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கன்று பிறந்து 18 மாதங்களுக்குள் காது அடையாள வில்லைகளை பொருத்திக் கொள்வதைக் கட்டாயமாக்க வேண்டும் எனவும், அவ்வாறு செய்யாத கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் காது அடையாள வில்லைகள் பரிசோதிக்கப்பட வேண்டும் எனவும், உரிய நடைமுறைகளைப் பின்பற்றாத இறைச்சி வெட்டும் இடங்கள் மற்றும் விற்பனை செய்யும் இடங்களுக்குச் சீல் வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (அ)

# தொழிலதிபரின் பயணப் பொதி திருடிய தம்பதி விளக்கமறியலில்!

கொழும்பு, ஏப். 23

தொழிலதிபர் ஒருவரின் பயணப் பொதியைத் திருடிச் சென்ற தம்பதியை விமான நிலையப் பொலிஸார் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்து நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதனையடுத்து எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கைதான தம்பதியர் 36 மற்றும் 35 வயதுடையவர்கள். இருவரும் களனி, திப்பிட்டிகொட பிரதேசத்தில் வசிப்பவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தொழிலதிபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாய்க்கு மாற்றும் சந்தர்ப்பத்தில் இவரது பயணப் பொதியை திருடிய தம்பதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்நிலையில் இந்த தொழிலதிபர் பயணப்பொதி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் விமான நிலைய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது பயணப்பொதியில் 2,510 அமெரிக்க டொலர்களும், 398,500 இலங்கை ரூபாவும் இருந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு இருவரையும் கைது செய்ததுடன் திருடப்பட்ட 2,510 அமெரிக்க டொலர்களும், 398,500 இலங்கை ரூபாவும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் இருவரையும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இதனையடுத்து மே மாதம் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எலுமிச்சை விலை உயர்வு!

கொழும்பு, ஏப். 23

ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் விலை 1200 ரூபா வரை உயர்ந்துள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் 1000 ரூபா தொடக்கம் 1200 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

கடந்த சில வாரங்களுக்கு முன், ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் விலை, 100 ரூபாய்க்கும் குறைவாக இருந்தது.

நிலவும் வறண்ட காலநிலையால், பானங்கள் தயாரிப்பதற்கான எலுமிச்சம் பழத்தின் தேவை அதிகரித்துள்ளது. (அ)

# அயோத்தி ஸ்ரீ ராமர் கோவிலின் முக்கியஸ்தர் இலங்கை வருகை



கொழும்பு, ஏப். 23

அயோத்தியின் ஸ்ரீ ராமர் கோவிலின் ஸ்ரீராம ஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் பொருளாளர் கோவிந்த் தேவ் கிரி மகாராஜ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், கோவிந்த் தேவ் கிரி மகராஜ் கண்டிக்கு சென்றபோது, அங்கு அவரை மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்றனர். (அ)

# கஞ்சாவில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் கண்காட்சி நடத்திய பேராசிரியர் கைது!

கொழும்பு, ஏப். 23

கஞ்சா பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் ஒருவர் லுணுகம்வெஹர ரணவர்ண பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அந்த வீட்டில் கஞ்சா தொடர்பான பொருட்களின் கண்காட்சியை கடந்த 20ஆம் திகதி ஏற்பாடு செய்தார். கஞ்சாவை ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை பார்வையிடச் சென்ற லுணுகம்வெஹர பொலிஸாரால் பேராசிரியர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சர்வதேச கஞ்சா தினத்தை (ஏப்ரல் 20) ஒட்டி அவர் இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்திருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. உலகின் சில நாடுகளில் கஞ்சாவினால் தயாரிக்கப்படும் பானங்கள் மற்றும் பொருட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நான்கு ரின்களில் அடைக்கப்பட்ட பானங்கள், அவுஸ்திரேலியாவில் உற்பத்தி செய்யப்படும் கஞ்சா அடங்கிய பல மதுப் போத்தல்கள், நெதர்லாந்தில் உற்பத்தி செய்யப்படும் கஞ்சாவைக் கொண்ட ஆற்றல் பானம் மற்றும் சுவிட்சர்லாந்தில் உற்பத்தி செய்யப்படும் கஞ்சாவைக் கொண்ட ஐஸ்கட்டி தேநீர் பானம் ஆகியவை அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கஞ்சா செடியில் இருந்து பெறப்படும் ஒரு வகை நார் மூலம் செய்யப்பட்ட ஆடைகள், அலங்கார பொருட்கள், உள்ளாடைகள், சாமான்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் உட்பட இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட கஞ்சாவுடன் தொடர்பான பொருட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

50 வயதுடைய பேராசிரியர் கம்பஹா மேல் யாகொட பிரதேசத்தில் வசிப்பவர் என்பதுடன் அப்பகுதி விவசாயிகள் சிலருடன் இணைந்து 2021ஆம் ஆண்டு கஞ்சா பயிரிடும் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களும் இந்த கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. கஞ்சா பற்றிய அவரது ஆய்வுகள் மற்றும் புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

எவ்வாறாயினும், கஞ்சாவைப் பயிரிடுவது, வைத்திருப்பது மற்றும் விளம்பரப்படுத்துவது சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளதால், பேராசிரியர் கைது செய்யப்பட்டதாக லுனுகம்வெஹர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டபோது, எட்டு கிராம் கஞ்சா மற்றும் பல கஞ்சா சுருட்டுகளும் காணப்பட்டதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விவாதம் நாளை பாராளுமன்றத்தில்!

கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தை நாளை புதன்கிழமை முதல் மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்துள்ளதாக பிரதிப் பொதுச் செயலாளரின் பிரதானி சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

இதன்படி, நாளை புதன்கிழமை, நாளை மறுதினம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் விவாதம் நடைபெறவுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) சட்டமூலம் (இரண்டாம் வாசிப்பு) மற்றும் நச்சு, அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழான விடயங்கள் நாளை புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை விவாதிக்கப்பட்ட பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் மறுசீரமைப்புகள் தொடரவேண்டும்

## நளின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஏப். 23**

**நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் பகிரங்க விவாதத்தை நடத்த முடியாதவர்கள் எவ்வாறு பொருளாதார பாதிப்புக்கு நிலையான தீர்வினை காண்பார்கள் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.தற்போதைய மறுசீரமைப்புக்களை அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் முன்கொண்டு செல்ல வேண்டும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளோம். பொருளாதாரம்,அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பு என்பன பாரிய சவால்களை எதிர்க்கொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பொறுப்பேற்றார். நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டினார். அதனை தொடர்ந்து எரிபொருள்,எரிவாயுவுக்கான வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

நாட்டின் நிதி நிலைமை ஸ்திரப்படுத்தப்பட்டதன் பின்னர் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.இனி வரும் காலங்களிலும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் வெற்றிப் பெற்றுள்ளன.எமது வெற்றி சித்திரை புத்தாண்டு கொண்டாட்டங்களில் வெளிப்பட்டன. நாட்டின் நிதி நிலைமை ஸ்திரமடைந்துள்ளமை எமது பிரதான வெற்றியாகும்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு ஐக்கிய மக்கள் சக்தியினர் மக்கள் விடுதலை முன்னணியினருக்கு அழைப்பு விடுத்தனர். ஆனால் விவாதம் இன்றும் இழுபறி நிலையில் தான் உள்ளது.பொருளாதார நிலைமை தொடர்பில் ஒரு விவாதத்தைக்கூட நடத்த முடியாத இவ்விரு தரப்பினரும் எவ்வாறு பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண்பார்கள்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் செயல்பாடுகள் வெற்றிபெற்றுள்ளன. எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் வெளிநாட்டு அரசமுறை கடன்கள் மறுசீரமைக்கப்படும். தற்போதைய மறுசீரமைப்புக்களை அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்-என்றார். (அ)

# பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 246 பேர் ஒரு மாத காலத்துக்குள் கைது!

கொழும்பு, ஏப். 23

நாட்டில் இடம்பெறும் பாதாள உலகச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட விசேட குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்புகளில் ஒரு மாத காலப் பகுதிக்குள் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 246 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, பாதாள உலகக் குழுத் தலைவர்களான குடு அஞ்சுவின் 26 உதவியாளர்களும், அங்கொடை லொக்காவின் 17 உதவியாளர்களும், வாழைத்தோட்டம் தினுக்கவின் 14 உதவியாளர்களும், கணேமுல்ல சஞ்சீவவின் 13 உதவியாளர்களும், கொஸ் கொடை சுஜீவின் 13 உதவியாளர்களும், பொடி லெசியின் 12 உதவியாளர்களும் தெமட்டகொட சமிந்தவின் 10 உதவியாளர்களும், கஞ்சிப்பான இம்ரானின் 10 உதவியாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 246 பேரில் 104 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# ரயில் சேவைகள் தொடர் நட்டத்தில்!



கொழும்பு, ஏப். 24

ரயில் பராமரிப்புப் பணிகளுக்கும் கடன் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரயில் சேவையானது தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

கேகாலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பஸ்கள் இல்லாத வீதி களில் பாடசாலைக்கும் மருத்துவமனைக்கும் செல்வதற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் 500 பஸ்களை கொள்வனவு செய்துள்ளது.

அதுமட்டுமன்றி அவிசாவளையில் இருந்து கொழும்பு வரையிலான களனி ரயில் பாதையை மின்சார ரயில் பாதையாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிக்கப்படுகிறது-என்றார். (அ)

# சுமங்கல தேரர் உள்ளிட்ட இருவர் விளக்கமறியலில்!

கொழும்பு, ஏப். 23

ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் உலப்பன சுமங்கல தேரர் உள்ளிட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் குடிசை வீடுகளை அத்துமீறுவதற்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கடை இலக்கம் 3 நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோதே உலப்பன சுமங்கல தேரர் உள்ளிட்ட இருவரையும் விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் 6 எம்.பிக்களுக்கு ஜனாதிபதி ரணில் ஒதுக்கிய 32 கோடி ரூபா!

கொழும்பு, ஏப். 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அறிவித்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 32 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பரவலாக்கப்பட்ட முன்மொழிவுகள் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திலிருந்து பிராந்திய அபிவிருத்தி திட்டங்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக, உறுப்பினர்களால் நேரடியாக ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒதுக்கீட்டை வெளியிடுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி 85 திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத் துவதற்காகவே இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அ.அட்டை வழங்கும் காலம் நீடிப்பு!

கொழும்பு, ஏப். 23

தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியாத 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தேசிய அடையாள அட்டை வழங்கும் கால எல்லை ஜூன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை அடையாள அட்டையைப் பெற முடியாதவர்களுக்காகவே இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 31ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை வழங்கும் காலத்தை நீடிக்குமாறு பிரதேச செயலாளர்கள் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# தபால் திணைக்களத்துக்கு இணையான போலி இணையத்தளங்கள் நீக்கப்படும்!

கொழும்பு, ஏப். 23

தபால் திணைக்களத்தின் இணையத்துக்கு இணையாகக் காணப்படும் போலி இணையத்தளங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கைக் கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு எச்சரித்துள்ளது.

இவ்வாறான 5 போலி இணையத்தளங்களை இணையத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இவ்வாறான இணையத்தளங்களுக்குள் பிரவேசித்து 35 பண மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார். (அ)

# சு.க. தலைமையை தந்தாலும் ஏற்பதற்கு நான் தயாரில்லை!

## கூறுகிறார் பொன்சேகா



கொழும்பு, ஏப். 23

சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவி தன்னிடம் வழங்கப்பட்டாலும் அதனை பொறுப்பேற்பதற்கு தயாரில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக மோதல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"சந்திரிகா அம்மையார் நீண்ட காலம் அரசியல் செய்தவர். எனவே, சுதந்திரக் கட்சியில் அவர் போஷகர் என்ற பதவி நிலையில் இருக்க வேண்டும். அந்த பதவியில் இருந்து தேவையான ஆலோசனைகளை வழங்கலாம்.

மைத்திரிபால சிறிசேன பற்றி என்னிடம் எதுவும் கேட்க வேண்டாம். அவற்றி பற்றி கருத்து வெளியிட்டு எனது நேரத்தை வீணடிக்க தயாரில்லை." - எனவும் பொன்சேகா கூறினார்.

அதேவேளை, மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் செல்வதற்கு நான் தயாரில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் களனி அமைப்பாளர் என்ற வகையில் அக்கட்சியின் மே தினக் கூட்டத்திலேயே பங்கேற்பேன் எனவும் அவர் கூறினார். (அ)

# சாய்ந்தமருதில் மிக ஆபத்தான நிலையில் ஒடுக்கமான பாலம்!

## புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



அம்பாறை, ஏப். 23

**சாய்ந்தமருது பகுதியில் ஒடுக்கமான பாலமொன்று புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதால் ஒரு வழிப்பாதையாக பாவிப்பதுடன் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.**

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள இப்பாலத்தின் ஊடாக ஆயுர்வேத வைத்தியசாலை, உப தபாலகம், பாடசாலை, பள்ளிவாசல்கள் மற்றும் தொழில் நிமித்தமான செல்வோர் அச்சத்துடன் பயணம் செய்கின்றனர்.

அத்துடன் இரவு வேளையில் எவ்வித மின் ஒளியும் இன்றி இருளில் மூழ்கி காணப்படுவதனால் மாற்று பாதைகளை பாதசாரிகள் பயன்படுத்துவதை காண முடிகின்றது.

இது தவிர உடைந்து விழும் நிலையில் இந்த ஒடுக்கமான பாலம் காணப்படுவதாகவும் உடனடியாக மீள உடைத்து புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என சாய்ந்தமருது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பாலம் குறித்து மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்கள் இந்த பிரச்னைக்கு தீர்வை தருவதாக கடந்த கால தேர்தல் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் அவை எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில் இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க முன்வர வேண்டும் என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மாஞ்சோலையில் தமிழ்-சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா

மட்டக்களப்பு, ஏப். 23

மாஞ்சோலை நிஜாமியா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு, கிண்ணியா நகர சமுர்த்தி வங்கி மற்றும் கிண்ணியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடாத்திய 2024ஆம் ஆண்டுக்கான தமிழ் சிங்கள புத்தாண்டு சமுர்த்தி விளையாட்டு போட்டி பைசல் நகர் கடலூர் விளையாட்டு மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வானது மாஞ்சோலை நிஜாமியா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு தலைவர் மற்றும் கிண்ணியா நகர சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.ஜி.எம். அர்ஷாத் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். எம். கனி கலந்து கொண்டார்.

இந்கழ்வின் சிறப்பு விருந்தினர்களாக கிண்ணியா பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ. முஹ்சீன் மற்றும் கிண்ணியா வங்கி சங்க முகாமையாளர் திருமதி முஸம்மிலா றாபீக் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# இறால் பண்ணைக்கு எதிர்ப்பு வாகரையில் ஆர்ப்பாட்டம்!




மட்டக்களப்பு, ஏப். 23

வாகரை பிரதேசத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுவரும் இறால் பண்ணைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இல்மனைட் அகழ்வை முற்றாக தடை செய்யுமாறு வலியுறுத்தியும் கிராம மக்கள் மற்றும் சிவில் அமைப்புகளினால் நேற்று திங்கட்கிழமை வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இயற்கை வளங்களை அழிக்கும் செயற்திட்டங்கள் தமக்கு வேண்டாம் எனவும் குறித்த திட்டங்களை நிரந்தரமாக தடை செய்யவேண்டும் எனவும் பிரதேச செயலகத்தின் நுழைவாயிலை மறித்து பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவ்விடத்திற்கு வருகை தந்த பிரதேச செயலாளர், தாம் புதிதாக எந்த அனுமதியையும் இறால் பண்ணை மற்றும் இல்மனைட் அகழ்வுக்காக வழங்கவில்லை என்றும் இனியும் வழங்கப்போவதில்லை என்றும் உறுதியளித்ததோடு தனது அதிகாரத்தையும் மீறி ஆளுநர் மற்றும் அமைச்சுக்கள் இணைந்த தரப்பின் ஆதரவுடன் குறித்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறியிருந்தார்.

அத்துடன் வாகரை பிரதேசத்தில் இல்மனைட் அகழ முயற்சிக்கும் அல்செமி கெமிமெட்டல் கம்பனியால் தனக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டுள்ளதையும் மக்கள் மத்தியில் பகிரங்கபடுத்தியிருந்தார்.

இதன் பின்னர் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆளுநர் மற்றும் ஏனைய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என வலியுறுத்தி பிரதேச செயலகத்தின் முன்பாக மக்கள் தொடர்ந்தும் போராடி வந்தனர்.

இந்த நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலாளர் அப்பகுதி மக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி முடிவெடுக்க தயாராக இருப்பதாகவும் அதுவரை போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க வெள்ளிக்கிழமை வரை இப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (அ)

# காஸா சிறுவர் நிதியத்துக்கு கல்முனை வலயம் மூன்று மில்லியன் ரூபாவுக்கும் மேல் நிதி உதவி

அம்பாறை, ஏப். 23

கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் ஆகியோரின் வழிகாட்டலில் காஸா சிறுவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி நிதியத்திற்கு கல்முனை வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் ரூபா 3,128,500/- நிதியினை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று கல்முனை வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் குறித்த தொகைக்கான ஆவணத்தை கணக்காளர் வை.ஹபீபுள்ளாவிடம் பிரதி கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் முன்னிலையில் கையளித்தார்.



இந்நிகழ்வில் பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச். ஜாபீர், உதவிக்கல்வி பணிப்பாளர்களான யூ.எல். றியால், எஸ். சஞ்சீவன், கல்முனை வலய பாடசாலை அதிபர்கள், பிரதி உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# காரைதீவில் சிறப்பாக நடந்த கலாசார விளையாட்டு விழா!

காரைதீவு, ஏப். 23

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41 வது வருட நிறைவை முன்னிட்டும், குரோதி புத்தாண்டு வருட பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் 26 வது மாபெரும் கலாச்சார விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை காரைதீவில் கோலாகலமாக நடைபெற்றது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் ரொட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்ற கலாச்சார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பித்தார்.

சீர்பெறு அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பிக்க, முதன்மை அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் ஏனைய அதிதிகளாக வைத்திய அதிகாரிகளான டாக்டர் பி.சுரேஸ்குமார், டாக்டர் க.ஹரிஷானந், போசகர்களான வி.இராஜேந்திரன், வீ.சகாதேவராஜா மற்றும் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.



இந்த நிகழ்விலே விசேடமாக காரைதீவு விளையாட்டு கழகத்தின் 40 வருடகால வரலாற்றை உள்ளடக்கிய “விபுலவிருட்சம்” சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது . கழகத் தலைவர் விஜயசாந்தன், பிரதம அதிதி செயலாளர் மகேசனிடம் முதல் பிரதியை வழங்கி வைத்தார்.

அத்துடன் 27 கல்வித்துறை சாதனையாளர்கள் பெற்றோர் சகிதம் மைதானத்தின் மத்தியில் வைத்து பகிரங்கமாக கௌரவிக்கப்பட்டார்கள். கழகத்தின் முன்னாள் தலைவர்களும் விசேட கௌரவம் மற்றும் விபுலவிருட்சம் நூலும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# மாலைதீவு பாராளுமன்றத் தேர்தலில் சீன ஆதரவு ஜனாதிபதி பெரு வெற்றி!

மலே, ஏப். 23

**மாலைதீவில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அந்நாட்டு ஜனாதிபதி முகமது மூயிஸின் கட்சி அமோச வெற்றி பெற்றுள்ளது.**

**மாலைதீவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 93 பாராளுமன்றத் தொகுதிகளில் மொத்தம் 368 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.**



வாக்கெடுப்பின் முடிவுகளில் 66 இடங்களை முகமது மூயிஸின் கட்சி வென்றுள்ளது.அதாவது மக்கள் தேசிய காங்கிரஸ் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

இந்நிலையில் மே மாதத்தில் புதிய சட்டசபை செயல்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சீன ஆதரவாளர் என கூறப்படும் தற்போதைய மாலைத்தீவு ஜனாதிபதியான முகமது மூயிஸ் இந்தியாவுடன் சுமுகமான உறவை கொண்டிராதவர்.

“தான் ஆட்சிக்கு வந்தால் மாலைதீவில் இருந்து இந்திய இராணுவ வீரர்களை விரட்டியடிப்பேன்” என தேர்தல் பிரசாரங்களிலும் அவர் கூறியிருக்கின்றார்.

இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த தேர்தல் அவரது செல்வாக்கை நிருப்பிப்பதற்கான தேர்தலாக பார்க்கப்பட்டது.

இந்நிலையில் மூயிஸின் இந்த வெற்றி சீன ஆதரவு செயல்பாடுகளை அதிகரிக்க மேலும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த தேர்தலுக்கு முன்னர் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் 08 அமைச்சர்கள் மாத்திரமே இருந்தமையால் மாலைத்தீவு ஜனாதிபதிக்கு சட்டங்களை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது.

தற்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் மாலைதீவு ஜனாதிபதிக்கு சட்டங்களை நிறைவேற்றுவது இலகுவாக இருக்கும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முகமது மூயிஸின் இந்த வெற்றி சீனாவுக்கான வெற்றியாக அமைவதுடன் இந்தியாவின் தோல்வி என்றும் கூட கூறப்படுகின்றது.

(அ)

# உக்ரைனுக்கு ௬ பில்லியன் டொலர் கடன் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை அனுமதி

நியூயோர்க், ஏப். 23

உக்ரைனுக்கு 61 பில்லியன் டொலர் கடனுதவி வழங்க அமெரிக்க பிரதிநிதிகள் சபை அனுமதியளித்துள்ளது.

குடியரசுக் கட்சியின் எதிர்ப்பின் காரணமாக ஜனாதிபதி ஜோ பைடனின் இந்த முன்மொழிவு பல மாதங்களாக தாமதமானது.

எவ்வாறாயினும், உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல்களை அடுத்து முன்வைக்கப்பட்ட வலுவான கோரிக்கையின் அடிப்படையில் குறித்த நிதியுதவிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த தீர்மானத்திற்கு உக்ரைன் ஜனாதிபதி வோல்டிமிர் செலென்ஸ்கி நன்றி தெரிவித்துள்ளார்.

“ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் எப்போதும் உலகளாவிய முக்கியத்துவத்தை கொண்டிருக்கும், அதை பாதுகாக்க அமெரிக்கா உதவும் வரை ஒருபோதும் தோல்வியடையாது.”

இந்த உதவியானது போர் விரிவடைவதைத் தடுப்பதுடன் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றும்” என வோல்டிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.





# இரண்டு ஹெலிகொப்டர்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

## ஒருவரின் உடல் மீட்பு

ரோக்கியோ, ஏப். 23

ஜப்பானில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு இராணுவ ஹெலிகாப்டர்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது.

ஒருவரின் உடல் மட்டும் மீட்கப்பட்ட நிலையில் 7 பேரின் நிலைமை என்னவென்று அறியாது, மீட்புக்குழுவினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொரிஷிமா தீவு அருகே இரவு நேரத்தில் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதலை முறியடிக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு ஹெலிகாப்டர்களும் எதிர்பாராமல் மோதிக் கொண்டதில் இவ் விபத்து நேர்ந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

(அ)

# பிரான்ஸில் பயன்படுத்தப்பட்ட புத்தக விற்பனை அதிகரிப்பு!

## வெளியீட்டாளர்கள் கவலை


பாரிஸ், ஏப். 23

பிரான்ஸில் பயன்படுத்தப்பட்ட புத்தகங்களுக்கான விற்பனை சந்தை அதிகரித்து வரும் நிலையில், எம்மாஸ் எனும் தொண்டு நிறுவனம் அதன் நிகழ்நிலை வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை புத்தக விற்பனை மூலம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், பயன்படுத்திய புத்தக விற்பனைக்கு வரி விதிக்க பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் முன்மொழிந்துள்ளார்.

அத்துடன், இந்த தீர்மானமானது புத்தக வெளியீட்டாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு உதவிபுரியும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த வார இறுதியில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான பாரிஸ் புத்தகக் கண்காட்சியில் உரையாற்றிய மெக்ரோன், பயன்படுத்திய புத்தகங்கள் அமேசான் போன்ற



முக்கிய நிகழ்நிலை சில்லறை தளங்களில் விற்கப்படும் புத்தகங்கள் பிரான்ஸின் புதிய புத்தகங்களின் விலைக்கு போட்டி அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

பிரான்ஸில் பயன்படுத்திய புத்தகங்கள் அதிகரித்து வருவதன் காரணமாக வெளியீட்டாளர்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, 2022 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களில் சுமார் 20 வீதம் பயன்படுத்தப்பட்டவை என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதால் பணவீக்கத்தின் போது மிகவும் கவரச்சிகரமானதாக பயன்படுத்திய புத்தகங்கள் பார்க்கப்படுகின்றன.

இதனிடையே, பயன்படுத்திய புத்தகங்களை கொள்வனவு செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதே நேரம் புதிய புத்தக விற்பனை சீராக இருப்பதாகவும் கலாசார அமைச்சு மற்றும் பிரெஞ்சு எழுத்தாளர்களின் உரிமைகள் சங்கமான சோபியாவின் ஆய்வில் கண்டறியப்பட்டது.

(அ)

# இஸ்ரேல் இராணுவ உளவு பிரிவு தலைவர் திடீரென இராஜினாமா!

மொஸ்கோ, ஏப். 23

இஸ்ரேல் இராணுவத்தின் உளவு பிரிவு தலைவரான அஹ்ரோன் ஹலிவா தனது பதவியை திடீரெனெ இராஜினாமா செய்துள்ளார்.

காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஒக்ரோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர ஒரே நாளில் ஆயிரத்து 200 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 250 பேரை பணய கைதிகளாக அவர்கள் கடத்திச் சென்றனர்.

இதனையடுத்து காஸா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. போர் 6 மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையல் இஸ்ரேல் இராணுவத்தின் உளவு பிரிவு தலைவர் அஹ்ரோன் ஹலிவா திடீரெனெ இராஜினாமா செய்துள்ளார். கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஹமாஸ் இயக்கத்தினர் நடத்திய தாக்குதலை தடுக்க தவறியதாக அஹ்ரோன் மீது விமர்சனங்கள் எழுந்த நிலையில், தனது பதவியில் இருந்து அவர் விலகியுள்ளார்.

(அ)



# வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் இலஞ்சம் பெறும் செயல்பாடு தீவிரம்!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 23

**வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் ஒருநாள் கடவுச்சீட்டு பெறுவதற்கு வரிசையில் இலக்கம் பெறுவதில் இருந்து கடவுச்சீட்டு பெறும் வரை இலஞ்சம் பெறப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

வவுனியா குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்தில் கடவுச்சீட்டு பெறுவதற்காக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மதவாச்சி போன்ற பிரதேசங்களில் இருந்து மக்கள் தினமும் அதிகளவில் வருகை தருகின்றனர்.

இந்நிலையில் ஒருநாள் கடவுச்சீட்டு மற்றும் சாதாரண கடவுச்சீட்டை பெறுவதற்காக வரும் மக்கள் அதிகாலையிலேயே இரு வரிசையில் காத்திருக்க வேண்டும். காத்திருப்போருக்கு காலை 6 மணியளவில் கடவுச்சீட்டு அலுவலகத்தால் இலக்கம் வழங்கப்பட்டு கடவுச்சீட்டு பெற வருவோர் உள்வாங்கப்படுவது வழக்கமாக உள்ளது.

இதன்போது வரிசையில் இரவு பகலாக பலரும் காத்திருக்கும் நிலையில் ஒருவருக்கு தலா 5000 ரூபாவுக்கும் அதிகமான பணத்தை பெற்று வரிசையில் காத்திருக்காமலேயே இலக்கங்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு கடவுச்சீட்டு அலவலகக் காவலாளிகள் உட்பட அதிகாரிகள் வரை உடந்தையாக செயற்படுவதாகவும் பொலிஸாரும் அவர்களுக்கு உடந்தையாக உள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனால் அங்கு இரவு பகலாக வரிசையில் நிற்பவர்கள் குறித்த தினத்தில் கடவுச்சீட்டை பெற முடியாமல் திரும்பிச் செல்லும் நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடவுச்சீட்டு அலுவலகத்தினுள்ளும் அதிகளவான பணத்தை வழங்கி மிக இலகுவாக கடவுச்சீட்டை பெற முடியவதாகவும் பொதுமக்கள் சிலர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விஜயதாச ராஜபக்ஷவின் நியமனம் சட்டவிரோதம்!

## துமிந்த திஸாநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 23

“சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது” என சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளில் இருந்து தப்பிக்கவே விஜயதாச ராஜபக்ஷ பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், அவர் இதற்கு முன்னர் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு, உறுப்பினரோ அல்லது வேறு எந்த முக்கிய கட்சியிலும் பங்குபற்றவில்லை எனவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக 400 முதல் 500 வரையான வழக்குகள் இருப்பதாகவும், அவர் சுதந்திரக் கட்சியை விற்றுவிட்டாரோ என்ற சந்தேகமும் தற்போது எழுந்துள்ளதாகவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தியத்தலாவை விபத்து; இரண்டு பேர் கைது!

கொழும்பு, ஏப். 23

பண்டாரவளை-தியத்தலாவை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்ப்பந்தய விபத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தியத்தலாவை கார் பந்தயத்தின்போது கார் ஒன்று ஒடுபாதையை விட்டு விலகி ஒடுபாதைக்கு வெளியே நின்ற பார்வையாளர்கள் மீது மோதியதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த 7 பேரில் 4 பந்தய உதவியாளர்களும், 8 வயது மற்றும் 9 வயது சிறார்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய முத்துசாமி உதயகுமார், 8 வயதுடைய சிவகுமார் தனுஷிகா, சீதுவை பகுதியைச் சேர்ந்த 9 வயதுடைய சமத் நிரோஷன், அவிசாவளை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ரசிக அபேநாயக்க, மாத்தறையைச் சேர்ந்த 62 வயதுடைய சாந்த உபாலிகமகே, அக்கு ரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய அசேன் ஈனடிகல, மாத்தறையைச் சேர்ந்த 60 வயதுடைய ஜயவர்தன ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் 23 பேர் காயமடைந்த நிலையில், தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பந்தயம் இறுதியாக கடந்த 2019 ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற நிலையில், அன்று நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல் காரணமாக பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

இதன்படி 5 வருடங்களாக போட்டிகள் நடத்தப்படாத நிலையில் நேற்று முன் தினம் இந்தப் போட்டி நேற்று நடை பெற்றபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்நிலையில், விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# தொழிலாளர்களுக்கு ஆதரவாக தீர்மானம் எட்டாவிட்டால் போராட்டம் வலுப்பெறும்!

## செந்தில் தொண்டமான் எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 23

பெருந்தோட்டக் கம்பனிகளுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம் எட்டப்படாவிட்டால் போராட்டங்கள் வலுப்பெறும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான ஆளுநர் செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை 1,700 ரூபாயாக அதிகரிக்குமாறு வலியுறுத்தி மலையக பகுதிகளில் நேற்று முன் தினம் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதற்கிடையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை உடனடியாக மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறனதொரு நிலையில், எதிர்வரும் 24ஆம் திகதி சம்பள நிர்ணய சபை மீண்டும் கூடவுள்ளது.

இதன்போது, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம் எட்டப்படாவிட்டால் போராட்டங்கள் வலுப்பெறும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செந்தில் தொண் டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# டெங்கினால் இறப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 23

நாட்டில் இந்த ஆண்டில் மேலும் ஒரு டெங்கு உயிரிழப்பு பதிவாகியுள்ளது. அதன்படி, டெங்கு உயிரிழப்புகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இந்த ஆண்டில் இதுவரை 21 ஆயிரத்து 453 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 608 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு டெங்கு நுளம்பு பரவும் ஆபத்தான வலயங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற அரிசி மூடைகள் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஏப். 23

வெயாங்கொடை பகுதியில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற ஒரு தொகை அரிசி கையிருப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில், கைப்பற்றப்பட்டுள்ள அரிசியை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

வெயாங்கொடை பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட அரிசி மாதிரிகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் பிரகாரம் பாடசாலை மாணவர்களுக்கு உணவு தயாரிப்பதற்கு விநியோகிக்கப்படவிருந்த அரிசிக் கையிருப்பே இவ்வாறு நுகர்வுக்கு பொருத்தமற்றது என அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

மாணவர்களின் போஷாக்கு குறைப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 9 ஆயிரத்து 134 அரச பாடசாலைகள் இந்த திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்காக 1.6 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஸ்ரீபாத உடமலுவிலிருந்து குதித்த இளைஞனை தேடுவது நிறுத்தம்!

கொழும்பு, ஏப். 23

ஸ்ரீபாத உடமலுவில் இருந்து கீழே குதித்து காணாமல்போன இளைஞனை தேடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக லக்ஷபான இராணுவத் தளத்தின் கட்டளை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி அம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேசத்தில் இருந்து இரண்டு யுவதிகளுடன் ஸ்ரீபாதா தரிசனம் செய்ய வந்த நபர், ஸ்ரீபாத உட மலுவையிலிருந்து இரத்தினபுரி வீதியில் ஓடி பாதுகாப்பு வேலியில் இருந்து கீழே குதித்துள்ளார்.

இதன்படி, லக்ஷபான இராணுவ முகாமில் இருந்து 15 பேர் கொண்ட குழுவினர் மற்றும் நல்லதண்ணி பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள் குழுவினர் காணாமல்போன இளைஞரை தேடுவதற்காக இளைஞர் கீழே குதித்த இடத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆனால் இதுவரை காணாமல் போன இளைஞன் தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்காததால், ஸ்ரீ பாதஸ்தானபித்த தேரரின் அறிவுறுத்தலுக்கு அமைய நடவடிக்கை நிறுத்தப்பட்டதாக கட்டளை அதிகாரி கூறினார். (அ)

## ஈரானிய...

ஈரான் அரசாங்கத்தின் கடனுதவியின் கீழ் 2011 ஆம் ஆண்டு உமா ஓயா பல் நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி நேற்று பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், பாகிஸ் தான் விஜயத்தை நிறைவு செய்து நாளை அவர் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள் ளது.

இஸ்ரேல்-ஈரான் இடையேயான மோதல் நிலை வலுப்பெற்றுள்ளதை அடுத்து ஈரான் ஜனாதிபதியின் இலங் கைக்கான பயணம் இரத்துச் செய்யப்பட் டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எம்.பி. பதவியை...

நேரிடும் என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் இந்த விடயம் குறித்து விரைவில் முடிவு எடுப்பார். கட் சியின் யாப்பு மற்றும் சட்டங்களின்படி ஒருவர் மற்றுமோர் அரசியல் கட்சியின் உறுப்புரிமையை பெற்றவுடன் அவரின் கட்சி உறுப்புரிமையை விரைவில் இழக்க நேரிடும் என்று பெரமுன கட்சியின் திஸ்ஸ குட்டியாரச்சி தெரிவித்தார்.

மேலும், “அமைச்சர் விஜயதாஸ சிறீ லங்காக பொதுஜன பெரமுன கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றதுடன் இந்தக் கட்சி ஊடாகவே பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். இந்நிலையில் மற்றுமோர் கட்சியின் பதவியைப் பெற்று குற்றமிழைத்துள்ளார் இதனால், அவர் பெரமுன கட்சியின் உறுப்புரிமையை இழப்பார். இதன் மூலம் அவர் பாராளு மன்ற உறுப்பினர் பதவியையும் இழப் பார் - என்று நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது தெரிவித்தார். (ஐ)

## “சிறீ இராமாயண...

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு, உலகின் மிக நவீன தொழில்நுட்பத்துடன் இந்த யாத் திரை திட்டம் இருக்கும் என்று தெரிவிக் கப்பட்டது.

அயோத்தி சிறீ இராமர் ஆலய தலைமை பொருளாளர் சுவாமி கோவிந்த் தேவ் கிரி மஹராஜ் சுவாமியின் வழிகாட்டுதலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் பிரபல விடுதியில் நடந்த இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியு மான சாகல ரத்நாயக்க பிரதம அதிதி யாக கலந்து கொண்டார்.

சிறீ ராமாயண பாதை யாத்திரைத் திட்டத்தின் மூலம் இராமாயண காவி யத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை முழுவதும் உள்ள பிரதான ஒன்பது முக் கிய இடங்கள் இந்து பக்தர்களின் புனித யாத்திரை மற்றும் சுற்றுலாப் பயணத்துக் காக பிரபலப்படுத்தப்படும்.

இது ஆன்மீக மற்றும் கலாசார பாரம் பரியத்தில் ஆர்வமுள்ள பல இலட்சம் இந்திய மற்றும் சர்வதேச சுற்றுலா இலங் கைக்கு அழைத்து வரும்.

இந்த இடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பை பக்தர்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல், இந்த வரலாற்று ஆலயங் களுடன் தொடர்புடைய பண்டைய ஆன்மீக நிகழ்வுகள் செயற்கை நுண்ண றிவு மற்றும் மெய்நிகர் யதார்த்தம் போன்ற அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் அனிமேஷன் செய்து பார்வையாளர்க ளுக்கு புதிய அனுபவத்தை அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னாரிலுள்ள ஆதாம் பாலம் முதல் நுவரெலியா சீதா எலிய வரை இராமாய ணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வோர் இடமும் இந்த யாத்திரை திட்டத்துக்கா கத் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிணை...

பிவிதுரு ஹெல உறுமயவின் தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் மூன்று தரப் பினருடன் பேச்சில் ஈடுபட்டுள்ளது. முதலாவதாக சீனாவைத் தவிர்த்து ஏனைய கடன் வழங்குநர்களை உள்ள டக்கிய உத்தியோகபூர்வ குழு, இரண் டாவது சீனா, மூன்றாவதாக சர்வதேச பிணைமுறியாளர்கள். இந்த அடிப்படை யில் இரு தரப்பு கலந்துரையாடல்கள் நடக்கின்றன.

சீனா உட்பட ஏனைய கடன் வழங்கு நர்களுடனான கலந்துரையாடல்களில் கடன் மறுசீரமைப்புக்கான இணக்கப் பாடு தீர்மானம் எடுக்கப்பட்டாலும் சர்வதேச பிணைமுறியாளருக்கும் இலங்கை பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடல்கள் அனைத்தும் தோல் வியடைந்துள்ளன.

அண்மையில், லண்டனில் சர்வதேச பிணைமுறியாளர்களுடன் நடந்த சந்திப் பில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பிணைமுறியாளர்கள் முன்வைத்த திட்ட யோசனையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது. இலங்கை அரசாங்கம் முன்வைக்கும் திட்ட யோசனைகளை சர்வதேச பிணைமுறியாளர்கள் ஏற்கத் தயாரில்லை.

கடன் மறுசீரமைப்பு தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளதால் சர்வதேச பிணைமுறியாளர்கள் தாமத கட்டணத் துக்கான வட்டியை எதிர்பார்த்துள்ளனர். 2023.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மாத்திரம் 1,678 மில்லியன் டொலர் தாமத கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

வங்குரோத்து அடைந்து விட்டோம் என்று அறிவித்து 2 ஆண்டுகள் நிறைவ டைந்துள்ளன. இருப்பினும் பேச்சுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

கடன் மறுசீரமைப்பை நிறைவு செய் தால் கடன் வழங்குநர்களுக்கு குறிப் பிட்ட கடன் தொகையை செலுத்த வேண்டும். அவ்வாறான நிலை ஏற்பட் டால் வெளிநாட்டு கையிருப்பு பாதிக் கப்படும். ஆகவே, ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்வரை கடன் மறுசீரமைப்பை அரசாங்கம் இழுபறிக்கு உள்ளாக்கும் - என்றார். (ஐ)

## சுதந்திரம்...

என்பன மட்டுப்படுத்தப்பட்ட அளவி லேயே காணப்படுகின்றன என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

எனினும், அரசியல் உரிமைகளுக்கு 40இற்கு 22 புள்ளிகள், சிவில் சுதந்திரத் துக்கு 60இற்கு 32 புள்ளிகள் என்று இலங் கையின் “சுதந்திர நிலவரத்துக்கு” மொத் தமாக 100இற்கு 54 புள்ளிகளை வழங்கி யுள்ளது. (ஐ)

## இலங்கை தமிழ்...

நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்றைய தினம் இந்துக்கள் இறந்த தமது தாயாருக்காக விரதமி ருக்கும் சித்திரா பௌர்ணமி தினம் என் பதால் பல உறுப்பினர்கள் பங்கேற்க மாட் டார்கள் என்று கட்சியின் தலைமைக்கு அறிவித்துள்ளனர் என்று தெரிய வருகின் றது.

எனினும், திருகோணமலை நீதிமன் றில் நாளை புதன்கிழமை வழக்கு விசா ரணைக்கு வருவதால் முன்னதாகவே மத் திய குழுவைக் கூட்டி ஆராய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில், இன் றைய தினம் மத்திய குழுவை கூட்டுவ தற்கு முடிவு செய்யப்பட்டதாக அறிய வருகின்றது. இந்தக் கூட்டம் வவுனியா வில் நடைபெறவுள்ளது. எனினும், இந் தக் கூட்டமும் சிலவேளைகளில் நடை பெறாது போக வாய்ப்புள்ளது என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# நண்பர்களை பாதுகாப்பதற்காகவே உண்மைகளை வெளியிடவில்லை!

**எதிர்க்கட்சித் தலைவர் சாடல்**

கொழும்பு, ஏப். 23

நெருங்கிய நண்பர்களை பாதுகாத்து வருவதே இன்றும்கூட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மைகள் வெளிவரா மைக்கான காரணமாகும். நான் திருடர்க ளின் தயவில் பதவி ஏற்காததால் அவர் களை பாதுகாப்பதற்கான எவ்வித தேவை யும் எனக்கு கிடையாது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாந் தோட்டை பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறை வசதிகளை நேற்று வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

மேலும், நாட்டு அரசியலில் தற்போது அதிகாரத்தை கைப்பற்ற சதிகள் இடம் பெற்று வருகின்றன. சதிகளை திட்டமி டுவதற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் கல்வியை கட்டியெழுப்புவதில் இல்லை. அதிகாரத்துக்காகவும் பதவிகளுக்காக வுமே இவ்வாறான சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

திருடர்களுடன் சேர்ந்து ஜனாதிபதி பதவியில் நானும் அமர்ந்திருந்தால் திரு டர்களை பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். நான் அவ்வாறு திருடர் களின் தயவில் பதவிகளை ஏற்காததால், திருடர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. தமது நெருங் கிய நண்பர்களை பாதுகாத்து வருவதே இன்றும் கூட உயிர்த்த ஞாயிறு தாக்கு தலின் உண்மைகள் வெளிவராமைக்கான காரணமாகும்.

இது குறித்து பேராயர் மெல்கம் கர்தி னால் ரஞ்சித் ஆண்டகை கூட கருத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறான வன் முறை செயலையும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களை யும் மறந்தே அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. பூரண முடியாட்சியை என் னிடம் வழங்குவதாகக் கூறினாலும், அதற்கான இரகசிய ஒப்பந்தங்களுக்கு நான் உடன்பட மாட்டேன்- என்றார்.

## பெரும்போக...

68 ஆயிரத்து 131 ஹெக்ரெயர் நிலம் சேத மானது. இதே காலப் பகுதியில் ஒரு இலட்சம் ஹெக்ரெயர் நெல் பயிர்கள் மழை மற்றும் வெள்ளத்தால் அழிவ டைந்தன.

இவை தவிர, 23 ஆயிரத்து 874 ஹெக் ரெயர் மரக்கறி பயிர்கள் பூச்சித் தாக்கம் மற்றும் பிற நோய்களால் அழிவடைந் தன. இவற்றின் அழிவு 27 சதவீதமாகும்.

எனினும், நடப்பு ஏப்ரல் மாதத்தில் மரக்கறி பயிர்களின் விளைச்சல் அதிகரித் துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ் பொது...

என்றார்.

இதேவேளை, இன்றைய தினம் தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு கூடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காலநிலைசார்...

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை யின் நிலவரம் மற்றும் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் என்பவற்றை உள்ளடக்கி வெளியிட்டுள்ள மாதாந்த மதிப்பீட்டு அறிக்கையிலேயே உலக உணவுத்திட் டம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

“இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் முகங்கொடுத்த மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து தற்போது படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றது. இந்த நெருக்கடியானது 2022 ஆம் ஆண்டில் சுமார் 62 இலட்சம் பேரை உணவுப் பாதுகாப்பற்ற நிலைக் குத் தள்ளியது. 2023 ஒக்ரோபரில் 24 சதவீதமான குடும்பங்கள் மிதமான உண வுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முகங் கொடுத்திருந்தனர்.

இருப்பினும் இந்த ஆண்டில் பண வீக்க வீழ்ச்சியுடன் நிலைமை ஓரளவுக்கு ஸ்திரமடைந்து வருகின்றது. எவ்வாறெ னினும், நாடளாவிய ரீதியில் 43 சதவீத மான குடும்பங்கள் வாழ்வாதாரத்துக் கான மாற்றுவழிகளையும், 42 சதவீத மான குடும்பங்கள் உணவைப் பெற மாற்றுவழிகளையும் கையாண்டுவருவ தனால், இதுகுறித்த கரிசனை இன்னமும் தொடர்கின்றது.

அத்துடன், தற்போது இலங்கை கால நிலை சார்ந்த சவால்களுக்கும் முகங்கொ டுத்து வருகின்றது. அதிகரித்துவரும் வெப் பநிலையும், மிகையான உஷ்ணமும் மனி தர்களின் உடல் ஆரோக்கியத்துக்கும், வாழ்க்கைத்தரத்துக்கும் கடுமையான அச் சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதுடன் விவ சாயத்துறை மீதும் அழுத்தங்களைத் தோற் றுவித்துள்ளது - என்றுள்ளது. (ஐ)

# ஹெகலியவுக்கு மீண்டும் மறியல்

கொழும்பு, ஏப். 23

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல உள்ளிட்ட 9 சந்தேகந பர்களும் எதிர்வரும் மே 6ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எதிரான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த போதே மாளிகாகந்தை நீதவான் லோசினி அபே விக்ரம இந்த உத்தரவை பிறப்பித்தார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல சார்பில் ஆஜரான ஜனா திபதியின் சட்டத்தரணி முன்வைத்த பிணை கோரிக்கை நேற்றும் நிராகரிக்கப் பட்டது.

இந்தியாவிலிருந்து தரமற்ற இம்யு னோகுளோபுலின் மருந்துகளை இறக்கு மதி செய்தது தொடர்பில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருந் தமை தெரிந்ததே. (ஐ)

## சிறீ லங்கன்...

ஹேலிஸ் நிறுவனம் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக குழு என்பதுடன், இதனை கட்டுப்படுத்தும் சக்திமிக்க பங் குதாரராக தம்மிக பெரேரா உள்ளார். இவர் வசம் 51 வீத பங்குகள் உள்ளன என் பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

இராமாயண பாதை திட்டம் தொடர் பான கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் சுற்றுலா பய ணிகள் இந்திய ரூபாயில் பணம் செலுத்த அனுமதிக்கும் யு. பி. ஐ. முறைமை அறி முகப்படுத்தப்பட்டுள்ளது. இது எம்மை பல நூற்றாண்டுகள் முன்னே அழைத்து செல்கிறது. ஏனெனில், முன்னர் இந்தியா, இலங்கையில் ஒருவரின் நாணயத்தை மற்றொருவர் பரிமாறிக் கொண்டனர்.

இராமாயண - பௌத்த பாதையை மேம்படுத்த எங்களின் தலைவர்கள் உறு தியளித்துள்ளனர். இது நமது தலைவர் களின் - பிரதமர் மோடி, ஜனாதிபதி ரணிலின் தொலைநோக்கு பார்வை. 2023 ஜூலையில் இது இறுதி முடிவா னது.

இராமாயண பாதை இந்திய சுற்றுலா பயணிகள் மற்றும் யாத்திரிகர்களின் வரு கையை அதிகரிக்கும். ஏற்கனவே, இலங்கை வரும் சுற்றுலா பயணிகளில் 5இல் ஒரு பங்குக்கும் அதிகமானவர்கள் இந்தியர்க ளாவர். இந்திய சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதால் இலங்கைக்கு அதிக பொரு ளாதார நன்மைகள் ஏற்படும். இலங்கை யின் அனைத்து மாகாணங்களும் இதன் மூலம் நன்மை அடையும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## சர்வதேச விசாரணைகளுக்காக
# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை நாடவுள்ளது கத்தோலிக்க திருச்சபை!

**கொழும்பு, ஏப். 23**

**உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து சர்வதேச விசாரணைகளை முன்னெடுப்பதற்காக வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் யோசனையொன்றை கத்தோலிக்க திருச்சபை முன்வைக்கவுள்ளது.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்காக இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை இந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை நாடவுள்ளது.

கர்தினால் மல்கம் ரஞ்சித் பிபிசியின் சிங்கள சேவையிடம் இதனை தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடங்களாகியுள்ளபோதிலும் இந்த தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் இந்த தாக்குதலின் பின்னால் உள்ள சதி முயற்சிகள் என்ன என்பது போன்ற விடயங்களை முன்னைய தற்போதைய அரசாங்கங்கள் வெளிப்படுத்த தவறிவிட்டன என அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்ற தனது வாய்மூல வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தவறியுள்ளதால் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் வழங்கியுள்ள வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்துள்ளேன் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றவேளை பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியாக உள்ளார். அவ்வேளை கொழும்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்ற வேளை தனது கடமைகளை நிறைவேற்றாமல் வெறுமனே தகவல்களை கொண்டு செல்பவராக காணப்பட்டார் என உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அவர் தற்போது பொலிஸ்மா அதிபராக பதவி வகிக்கின்றார் எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறினார்.

இவ்வாறான சூழ்நிலையில் எவராவது நீதியை எதிர்பார்க்க முடியுமா என கர்தினால் மல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பியுள்ளார். (அ)

## மட்டக்களப்பை சேர்ந்த மூவர் தமிழகத்தில் நேற்றுத் தஞ்சம்

சென்னை, ஏப். 23

இலங்கையில் இருந்து 03 பேர் இந்தியாவில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த எட்டு வயது சிறுவன் உள்ளிட்ட 03 பேர் நேற்று முன் தினம் இரவு சுமார் 11 மணியில் பூநகரி கடற்கரையில் இருந்து பைபர் படகில் புறப்பட்டு நேற்று காலை தனுஷ்கோடி அரிச்சல் முனை ஐந்தாவது மணற்பரப்பில் தரையிறங்கியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு விரைந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார், மூவரையும் மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

## விசுவமடு வீடொன்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

முல்லைத்தீவு, ஏப். 23

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விசுவமடுப் பகுதியில் வீடொன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் கிருஸ்ணன் கிருஸ்ணராசா எனும் 52 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குடும்பஸ்தர் குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மன்னாரில் புலிகளின் தங்கம், பணத்தை தேடிய கடற்படை, பொலிஸ்காரரர் கைது!

மன்னார், ஏப். 23

சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தை அண்டிய இடத்தில் புலிகளால் தங்கம், பணம் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இடத்தை இரகசியமாக அகழ்ந்த கடற்படை சிப்பாய் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டதாக சிலாவத்துறை கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கடற்படை சிப்பாய் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் வந்ததாகக் கூறப்படும் வாகனம் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 30-38 வயது



டைய நாவுல, மெனிக்தென மற்றும் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் சாரதி எனவும் மற்றையவர் தொழிலாளி எனவும் பொலிஸ் விசாரணைகளின்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. (அ)

## மரக்கறிகள் விலை உயர்வு
## ஒரு கிலோ இஞ்சி 3,200 ரூபா!

நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று ஒரு கிலோ தேசிக்காய் 1,400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ இஞ்சி 3,200 ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ உள்நாட்டு உருளைக்கிழங்கு 180 ரூபாவாகவும் ஒரு கிலோ வெள்ளைப்பூண்டு 600 ரூபாவாகவும் ஒரு கிலோ கரட் 320 ரூபாவாகவும் ஒரு கிலோ கத்தரிக்காய் 280 ரூபாவாகவும் ஒரு கிலோ பீன்ஸ் 320 ரூபாவாகவும் ஒரு கிலோ பச்சை மிளகாய் 360 ரூபாவாகவும் ஒரு கிலோ லீக்ஸ் 280 ரூபாவாகவும் ஒரு கிலோ பீட்ரூட் 240 ரூபாவாகவும் ஒரு கிலோ தக்காளி 200 ரூபாவாகவும் ஒரு கிலோ கறி மிளகாய் 600 ரூபாவாகவும் ஒரு கிலோ புடோலங்காய் 280 ரூபாவாகவும் ஒரு கிலோ பீர்க்கங்காய் 400 ரூபாவாகவும் ஒரு கிலோ வெண்டிக்காய் 200 ரூபாவாகவும் ஒரு கிலோ முள்ளங்கி 160 ரூபாவாகவும் ஒரு கிலோ வெங்காயத்தாள் 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (அ)

## வைத்தியசாலை குளியலறையில் வழுக்கி வீழ்ந்து கர்ப்பவதி மரணம்!

**வவுனியாவில் துயரச் சம்பவம்**

வவுனியா, ஏப். 23

வவுனியா வைத்தியசாலையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித்தாய் குளியலறையில் வழுக்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளதுடன், அவரது வயிற்றில் இருந்த சிசுவும் மரணமடைந்துள்ளது.

மதவாச்சிப் பகுதியைச் சேர்ந்த நிறைமாத கர்ப்பிணித் தாய் ஒருவர் வவுனியா வைத்தியசாலையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்று திங்கட்கிழமை விடுதியில் உள்ள குளியலறைக்குச் சென்றநிலையில் வழுக்கி வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அவர் மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து, அவர் மீட்கப்பட்டு அவரது வயிற்றில் உள்ள குழந்தையை காப்பாற்றுவதற்கான சத்திர சிகிச்சையை வைத்தியர்கள் மேற்கொண்டுள்ளனர். எனினும் வயிற்றில் இருந்த சிசுவும் உயிரிழந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# புதிய பரிணாமத்தில் மே 18 நினைவு வாரம்

**யாழில் சிவில் அமைப்புக்கள் ஆராய்வு**

யாழ்ப்பாணம், ஏப். 23

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15 ஆவது ஆண்டை பரவலாக மக்கள் மயப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, மே 18 இனப்படுகொலை வாரத்தை இவ்வாண்டில் இருந்து புதிய பரிணாமத்தில் முன்னெடுக்கவேண்டும் எனவும், யாழில் சிவில் அமைப்புக்கள் கூடி ஆராய்ந்துள்ளன.

யாழ்ப்பாணம் புனித தெரேசா தேவாலய முன்றலில் இடம்பெற்ற சிவில் சமூக அமைப்புகளின் ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தவையும் இன்று காசாவில் நிகழ்ந்து கொண்டிருப்பவையும் இனிமேலும் எந்த மக்களுக்கும் நிகழக்கூடாது எனவும் சிவில் சமூக அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மேலும், முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவேந்தலை மீள நிகழாமை நோக்கிய பயணத்தின் தொடக்கமாக மக்கள் அனைவரும் சிந்திக்கும் தளமாக உருவமைப்பு செய்வதற்கு, மக்கள் சார்ந்து சிந்தித்து செயற்படும் பல சிவில் சமூக அமைப்புகள் தீர்மானித்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு விரோதமாக மூளைச்சலவை செய்யப்படுவதிலிருந்தும், மக்களுக்கு எதிராக செயற்படும் அரசு, பெருவணிக நிறுவனங்கள், கட்சிகள், அமைப்புகளின் பிரசாரங்களிலிருந்தும், தம்மை விடுவித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தலை பல்வேறு புதிய வழிமுறைகள் ஊடாகவும் மக்கள் மயப்படுத்தி மேற்கொள்வதற்கான முன்மொழிவுகள் கலந்துரையாடப்பட்டு, யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நினைவேந்தல் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் விளக்கமளித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கே. கே. ஆர். த்ரில் வெற்றி
# ஆர். சி. பி. அதிர்ச்சி தோல்வி




கொல்கத்தா, ஏப். 23

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிரான போட்டியில் இறுதிப் பந்தில் திரில் வெற்றி பெற்றது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

223 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டியது ஆர். சி. பி. அணி. இருந்தும் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது கொல்கத்தா.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 36 ஆவது லீக் போட்டி கொல்கத்தாவின் ஈடன் - கார்டன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற ஆர். சி. பி. முதலில் பந்து வீசியது. 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 222 ஓட்டங்கள் எடுத்தது கே. கே. ஆர்.

அந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சால்ட் 14 பந்துகளில் 48 ஓட்டங்கள் குவித்தார். கே. கே. ஆர். அணித் தலைவர் ஸ்ரேயஸ் 50, ரிங்கு சிங் 24 , ரஸல் 27 , ரமன்தீப் சிங் 24 ஓட்டங்கள் எடுத்தனர்.

223 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஆர். சி. பி. விரட்டியது.

கோலி 18 ஓட்டங்களிலும், டூப்ளசி 7 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து வெளியேறினர். இதனால் ஆர். சி. பி. இரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர். வில் ஜேக்ஸ் மற்றும் பட்டிதார் இணைந்து 3 ஆவது விக்கெட்டுக்கு 102 ஓட்டங்கள் சேர்த்தனர். இருவரும் அரைச்சதம் கடந்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து கிரீன் மற்றும் லோம்ரோர் ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

சுயாஷ் பிரபுதேசாய் 24 மற்றும் தினேஷ் கார்த்திக் 25 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினர். இறுதி ஓவரில் ஆர். சி. பி. அணி வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஸ்டார்க் வீசிய அந்த ஓவரில் முதல் 4 பந்துகளில் மூன்று சிக்ஸர்கள் விளாசியிருந்தார் கரண் சர்மா.

2 பந்துகளில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் கரண் சர்மா ஆட்டமிழந்தார். 7 பந்துகளில் 20 ஓட்டங்கள் எடுத்தார் அவர். கடைசி பந்தில் ஒரு ஓட்டம் மட்டுமே ஆர். சி. பி. அணியால் எடுக்க முடிந்தது. இதன் மூலம் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் கொல்கத்தா வெற்றி பெற்றது.

இன்னிங்ஸ் இறுதிப் பந்தில் ஆர். சி. பியின் 2 ஆவது ஓட்ட முயற்சியை கொல்கத்தா விக்கெட் காப்பாளர் சால்ட், விக்கெட்டுக்களைத் தகர்த்து தடுத்தார். அது கே. கே. ஆர். அணி வெற்றியை உறுதி செய்தது. இந்தப் போட்டியில் 3 ஓவர்கள் வீசிய ஸ்டார்க், 55 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

இறுதி ஓவரில் 3 சிக்ஸர்களைக் கொடுத்தாலும் கடைசி இரண்டு பந்துகளை சிறப்பாக வீசி கொல்கத்தா அணியின் வெற்றிக்கு உதவினார் ஸ்டார்க்.

(எ)

## 3 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப்பை வீழ்த்தியது குஜராத்

முலான்பூர், ஏப். 23

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 37 ஆவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது குஜராத் டைட்டன்ஸ் அணி. கில், சாய் சுதர்ஷன் மற்றும் ராகுல் தெவாட்டியா போன்ற வீரர்கள் குஜராத் அணியின் வெற்றிக்கு உதவினர்.

சண்டிகரிலுள்ள முலான்பூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அந்த அணி 20 ஓவர்களில் 142 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. 99 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 7 விக்கெட்களை இழந்து தடுமாறியது பஞ்சாப். ஷஷாங் சிங் மற்றும் அசுதோஷ் சர்மா என இருவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். குஜராத் அணி வீரர் சாய் கிஷோர் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

143 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை குஜராத் அணி விரட்டியது. அந்த அணியின் /ப்மன் கில் மற்றும் சாஹா இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். சாஹா 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சாய் சுதர்ஷன் களத்துக்கு வந்தார். 35 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கில் ஆட்டமிழந்தார். அவரை லிவிங்ஸ்டன் வெளியேற்றினார்.

தொடர்ந்து மில்லர், சாய் சுதர்ஷன், அஸ்மதுல்லா ஓமர்சாய் ஆகியோர் ஆட்டமிழந்தனர். சாய் சுதர்ஷன் 31 ஓட்டங்கள் எடுத்தார். அதன் பின்னர் ராகுல் தெவாட்டியா மற்றும் ஷாருக்கான் இணைந்து பொறுப்புடன் விளையாடினர். ஹர்ஷல் படேல் வீசிய 19 ஆவது ஓவரில் 2 விக்கெட்களை கைப்பற்றினார். ஷாருக் மற்றும் ரஷித் கான் விக்கெட்டை அவர் வீழ்த்தினார்.

19.1 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 146 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது குஜராத். தெவாட்டியா 18 பந்துகளில் 36 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். பஞ்சாப் அணிக்காக ஹர்ஷல் படேல் 3 விக்கெட்கள், லிவிங்ஸ்டன் 2 விக்கெட்கள், அர்ஷ்தீப் மற்றும் சாம் கரன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருதை சாய் கிஷோர் வென்றார்.




### - சாப்மேன் அதிரடி! -

# ரி - 20 இறுதிப் போட்டி: நியூஸிலாந்து வெற்றி

ராவல்பிண்டி, ஏப். 23

3 ஆவது ரி - 20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது நியூஸிலாந்து அணி. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் 1 - 1 என்று சமனானது.

ராவல்பிண்டியில் நடந்த ரி - 20 தொடர் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்கள் எடுத்தது அந்த அணி. தொடர்ந்து விளையாடிய நியூஸிலாந்து 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 179 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

புதிய வீரர்களைக் கொண்டிருக்கும் நியூஸிலாந்து அணியின் இந்தக் காட்டடி வெற்றி பாகிஸ்தான் ஓய்வறையில் அதிர்ச்சியையும் சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது. நியூஸிலாந்தின் அதிரடி மார்க் சாப்மேன் 9 பௌண்ட்ரிகள் 4 சிக்ஸர்களுடன் 87 ஓட்டங்கள் விளாசி வெற்றிக்கு இட்டுச் சென்றார்.

179 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டும் போது பெரிய சிக்ஸர்கள் அடிக்கும் வீரர்கள் டிம் றொபின்சன் 28, டிம் செய்ஃபர்ட் 21 ஓட்டங்கள் எடுத்து அதிரடித் தொடக்கம் கொடுத்தனர். ஆனால், இருவருமே முறையே நசீம் ஷா மற்றும் அப்பாஸ் அஃப்ரீடியிடம் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினர்.

இரண்டு முக்கிய விக்கெட்டுகள் விழுந்து விட்ட பிறகு அனுபவமற்ற வீரர்களை வைத்துக் கொண்டு பாகிஸ்தானின் பிரமாத பந்து வீச்சில் நியூஸிலாந்தால் வெற்றி பெற முடியாது என்ற எண்ணமே ஏற்பட்டது.




ஆனால், மார்க் சாப்மேன் தனது பாகிஸ்தான் அனுபவத்தை மீட்டெடுத்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இந்த போட்டியில் சாப்மேனுக்கு அதிர்ஷ்டம் இருந்தது நசீம் ஷா இவர் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை கோட்டை விட்டார். இதுதான் பாகிஸ்தான் தோல்விக்குப் பிரதான காரணமானது. ஏன் பாகிஸ்தான் அணிக்கு இது அதிர்ச்சி எனில், ஷாஹின் அஃப்ரீடியையும், நசீம் ஷாவையுமே சாப்மேன் பின்னி எடுத்து விட்டார். 15 ஆவது ஓவரில் ஷாஹின் அஃப்ரீடியை 2 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸர் விளாசினார் சாப்மேன்.

உடனே நசீம் ஷாவைக் கொண்டு வந்தார். ஆனால், அவரின் ஓவரில் 3 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸர் விளாசினார் சாப்மேன். இந்த ஓவரில் 23 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. சாப்மேன் - ஃபாக்ஸ்கிராப்ட்டும் சேர்ந்து 3 ஆவது விக்கெட்டுக்காக 117 ஓட்டங்களை 12 ஓவர்களில் விளாசினர்.

முன்னதாக துடுப்பாட்டத்து சாதகமான ஆடுகளம் என்று பாபர் அசாம் வர்ணித்த நிலையில் பாகிஸ்தான் பெரிய இலக்கை எடுக்கத் தவறியது. நியூஸிலாந்து முதலில் பாகிஸ்தானை துடுப்பெடுத்தாட அழைத்தது. ஆனால், நியூஸிலாந்து பந்து வீச்சாளர்கள் ஜாக் ஃபவுக்ஸ், இஷ் சோதி, ரூர்கே ஆகியோர் பாகிஸ்தானை முடக்கினர்.

பாபர் அசாம் - ரிஸ்வான் போன்ற புகழ்பெற்ற ஜோடியால் பவர்பிளேக்குப் பிறகு 6 ஓவர்களில் 36 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. பாபர் அசாமை பிரேஸ்வெல் வீழ்த்தினார்.

ஒருவழியாக இர்பான் கான் 20 பந்துகளில் 30 ஓட்டங்களையும் ஷதாப் கான் 20 பந்துகளில் 41 ஓட்டங்களையும் விளாசி அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை 178 ஓட்டங்களுக்கு உயர்த்தினர். இஷ் சோதி சிறப்பாக பந்து வீசி 25 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இந்த ஆடுகளத்தில் 178 ஓட்டங்கள் போதாது என்பதை நியூஸிலாந்து மார்க் சாப்மேன் நிரூபித்தார். இவரே ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வியட்நாம் அதிபர் ஊழலால் பதவி விலகல்! வியத்தகு பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியுறுமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா


ஆசியாவில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் பாரிய தடைகளைத் தாண்டி பொருளாதார, அபிவிருத்தி வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய நாடுகளைத் தான் ஆசியாவின் அதிசயம் (Asian miracles) என்று அழைப்பார்கள்.

**வியக்க வைக்கும் வியட்நாம் பொருளாதாரம்:**

இந்த வகையில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் முதலாவதாக ஜப்பான், தாய்வான், அதன் பின்பு தென் கொரியா, சமீபத்தில் சீனா ஆகிய நாடுகள் தங்கள் நாட்டில் இருக்கும் பிரச்சனைகளைக் கடந்து உற்பத்தியில் மட்டும் அல்லாமல் ஏற்றுமதி சந்தையிலும் வளர்ச்சி பெற்றுள்ளன.

போரின் பின்னரான ஏழ்மையில் இருந்து 90 சதவீதம் வரை மீண்டு அபிவிருத்தியில் பெரிய சாதனை படைத்துள்ளன. போருக்குப் பின் உலகமயமாக்கல், வர்த்தக வளர்ச்சி, முதலீடுகள் என உலக நாடுகளின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து. குறிப்பாக ஆசிய நாடுகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றை வைத்து மிகப் பெரிய வளர்ச்சி கண்டது.

ஒவ்வொரு வருடமும் சராசரியாக ஆசியச்சந்தையின் ஏற்றுமதி வர்த்தகம் இருபது சதவீதம் வளர்ச்சி கண்டது வரலாற்று உண்மை. இவ்வகையில் வியட்நாமின் பொருளாதாரம் கடந்த தசாப்தத்தில் வெளிநாட்டு முதலீடுகள் பல குவிந்தன. பெய்ஜிங்கிற்கும் வாஷிங்டனுக்கும் இடையே உறவுகள் முறிவடைந்ததால், சீனாவிற்கு மாற்றான நாடாக மாறியது.



**ஊழலால் அதிபர் பதவி விலகல்:**

ஆனால் தற்போது தென்னாசியாவில் வேகமாக வளர்ந்து வரும் வியட்நாமின் பொருளாதாரத்தை உலுக்கிய ஊழல் சர்ச்சையில் வியட்நாமின் அதிபர் பதவி விலகி உள்ளார். வியட்நாமின் அரசியல் ஸ்திரத்தன்மை குறித்து உயர் ஆளும் தலைவர்களிடையே கொந்தளிப்பும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

வியட்நாம் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழல் சர்ச்சையில் வியட்நாமின் ஜனாதிபதி வோ வான் தொங் (Vo Van Thuong) ராஜினாமா செய்தார். அதன் பின் துணை ஜனாதிபதி வோ தி அன் சுவான் செயல் தலைவராக நியமிக்கப்பட்டார்.


வியட்நாம் நாடு ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை பெரிதும் சார்ந்துள்ளது. ஆனால் அதன் ஆளும் தலைவர்கள் அதிகாரத்தின் மீதான கட்சியின் பிடியை இறுக்கி, பரவலான ஊழலை நடாத்தி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

**கம்யூனிச பொருளாதார மறுசீரமைப்பு:**

குறிப்பாக இலத்திரனியல் மற்றும் கம்ப்யூட்டர்கள் போன்ற உயர் தொழில்நுட்ப தயாரிப்புகளின் உற்பத்தியில் அந்நிய முதலீட்டில், மற்றொரு “ஆசியப் புலி” பொருளாதாரமாக மாறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வியட்நாமின் உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதி பன்னாட்டு நிறுவனங்களை உள்ளடக்கியதால், முதலீட்டாளர்களின் நம்பிக்கை உயர்ந்தது. கம்யூனிச ஆட்சியில் அதேவேளை ஊழலுக்கு எதிரான பிரச்சாரம் உள்நாட்டு வணிகங்களுக்கான சட்டவிரோத கட்டணங்கள் மற்றும் பிறசெலவுகளைத் தடுப்பதில் சில பலன்களை வழங்கியதாக பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் தற்போதய அரசியல் ஊழல்களால், சலசலப்பைக் கொண்டு வந்ததுடன் அரசியல் நிச்சயமற்ற தன்மையை உயர்த்தியது. அத்துடன் ஏற்றுமதி குறைந்ததால், பொருளாதார வளர்ச்சி 2022ல் 8 வீதமாக இருந்த நிலையில் கடந்த ஆண்டு 5.1 வீதமாக சரிந்தது.

தற்போது ஆளும் கட்சிக்குள் நிலவும் போட்டிகளாலும், ஊழல் தொடர்புடைய தலைமையின் அதிகார துஷ்பிரயோகத்தாலும், வியட்நாமின் அரசியலில் இரண்டு ஆண்டுகளில் இரண்டாவது தலைவர் அதிபர் பதவியை ராஜினாமா செய்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




**தென் ஆசியாவில் ஆச்சரியம் ஊட்டும் வகையில் பொருளாதார வளர்ச்சியில் முன்னேறிய வியட்நாமில், கம்யூனிஷ்ட் கட்சியின் ஊழலால் அதிபர் பதவி விலகி உள்ளார். வியக்க வைக்கும் வியட்நாம் என பேசப்பட்ட தேசத்தின் அபிவிருத்தி வீழ்ச்சியடைவதை தற்போது காணலாம்.**




**வியட்நாமின் பாரிய மோசடி வழக்கு:**

வியட்நாமின் மிகப்பெரிய மோசடி வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ரியல் எஸ்டேட் அதிபரின் தீர்ப்பு வியட்நாமின் ஊழல் எதிர்ப்பு பிரச்சாரத்தில் ஒரு திருப்புமுனையாகும். வணிகப் பெண் முகவரான ட்ரூங் மை லான், வியட்நாமின்ஹோ சி மின் நகரில் ஏப்ரல் 11, 2024 இல் நடந்த வழக்கு விசாரணையில் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

ரியல் எஸ்டேட் அதிபர் 12.5 பில்லியன் டாலர்களை, கிட்டத்தட்ட கூ12.5 பில்லியனைப் கையாடியதாகக் குற்றம்சாட்டப்பட்டதால், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதுவே வியட்நாமின் 2022 ஜிடிபியில் 3 சதவீதம், அதன்மிகப்பெரிய நிதி மோசடி வழக்காகும்.




**வியட்நாமின் எதிர்காலத் தலைமை**

அதிபர் வோ வான் தொங் விலகலை அறிவிப்பதில், கம்யூனிஸ்ட் கட்சியின் நற்பெயருக்கு ஒரு மோசமான முத்திரையை குத்தி விட்டன என்று அரச ஊடகங்கள் தெரிவித்தன.

தொங் 2011 முதல் கட்சிக்கு தலைமை தாங்கி 79 வயதாகும் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்தார். மேலும் இந்த மாற்றம் வியட்நாமின் எதிர்காலத் தலைமை எப்படி இருக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

வியட்நாமின் தலைவர்கள் நாட்டில் கருத்து வேறுபாட்டிற்கான வாய்ப்பை வெகுவாகக் குறைத்துள்ளனர். பல எரிசக்தி நிபுணர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களை சிறையில் அடைத்தனர். இதற்கிடையில், “எரியும் உலை” என்று விவரிக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு பிரச்சாரம் ஆயிரக்கணக்கான வணிகர்களையும் அதிகாரிகளையும் எரிச்சலடைய வைத்துள்ளது.

**புதிய அதிகார மையம்:**

வியட்நாமின் தலைவர்கள் 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டைக் கூட்டவுள்ளனர். அதுவரை, அரசியல் வல்லுநர்கள் கூறுகையில், ஆதிக்கத்திற்காக வோ வான் தொங் இடத்தைப் பிடிக்க போட்டியாளர்கள் மத்தியில் அதிக கொந்தளிப்பு இருக்கலாம்.

சிங்கப்பூரின் ஐஎஸ்ஏஎஸ் - அரசியல் ஆய்வு நிலைய அறிக்கையின்படி, ஊழல் எதிர்ப்பு இயக்கம் வியட்நாமின் அதிகாரத்துவத்தை மிகவும் எச்சரிக்கையாக ஆக்கியுள்ளது.

புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும், தெளிவான தலைமை திட்டம் அறிவிக்கப்படாவிட்டால், அரசியல் உட்பூசல்கள் 2026 வரைநீடிக்கும் என்று சிங்கப்பூரில் உள்ள ஐஎஸ்ஏஎஸ் ஒரு அறிக்கையில் கூறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், முதலீட்டாளர்கள் மற்றும் வியட்நாமின் பொருளாதார பங்காளிகள் நாட்டின் புதிய அரசியல் யதார்த்தங்களுடன் மாறி வாழ வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

ஆயினும் நாட்டின் அதிபர் பதவி விலகலுக்கு வியட்நாமிய கம்யூனிஷ்ட் கட்சியின் ஊழலும், அதிகார துஷ்பிரயோகமுமே காரணம் என கூறப்படுகிறது.



# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் இலங்கையில் நீதிக்கான போராட்டங்கள்!



ருக்கி பெர்னாண்டோ

2024ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று இலங்கையில் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. கொழும்பு பேராயத்திலுள்ள இரண்டு கத்தோலிக்க தேவாலயங்கள், கிழக்கு மாகாணத்தில் உள்ள சியோன் தேவாலயம் மற்றும் கொழும்பில் உள்ள மூன்று உயர்தர ஹோட்டல்கள் ஆகியவை தாக்குதல் நிகழ்த்தப்பட்ட இலக்குகளில் உள்ளடங்குகின்றன. இதன் போது 40 வெளிநாட்டவர்கள் மற்றும் 45 குழந்தைகள் உட்பட சுமார் 315 பேர் வரை கொல்லப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது, இது இலங்கையில் போருக்குப் பிந்தையதான மிகப் பாரிய அளவிலான படுகொலைச் சம்பவமாகும்.

சேதமடைந்த தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல் கள் விரைவாக புனரமைக்கப்பட்டன. ஆனால், உயிர் பிழைத்த மற்றும் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு இன்னும் மருத்துவ ரீதியான, உணர்வு ரீதியான மற்றும் நிதி ரீதியான உதவிகள் தேவைப்படுகிறது. அவர்களின் கண்ணீர், சோகம், வலி என்பன அவர்களின் வாழ்க்கை மீளக் கட்டமைதலை விட்டும் வெகு தொலைவில் இருப் பதை உணர்த்தி நிற்கின்றன.

இத்தாக்குதல்கள் இஸ்லாமிய போராளிகளால் மேற் கொள்ளப்பட்டன. தாக்குதலுக்குப் பின் ஒரு இஸ்லா மியர் கொல்லப்பட்டதுடன் முஸ்லிம்களது வியாபார நிலையங்கள் மற்றும் வீடுகள் அழிக்கப்பட்டன மற்றும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டன. தாக்குதலுக்குப் பிறகு நீதியற்ற முறையில் பல மாதங்களாக, பல ஆண்டுகளாக குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக ஏராள மான முஸ்லிம்கள் தடுத்து வைக்கப்பட்டனர். தாக்குதல் களுக்குக் காரணமான முஸ்லிம்கள் பற்றிய கடுமையான விமர்சனங்களையும், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடனான ஒருமைப் பாட்டின் வெளிப்பாட்டையும் கொண்ட கவிதைகளை யும் எழுதிய ஆசிரியரும் இளம் முஸ்லிம் கவிஞருமான அஹ்னப் ஜஸீம் இவ்வாறான தேசிய மற்றும் சர்வதேச கவனத்தை ஈர்த்த நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்தவர்க ளில் ஒருவராவார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைப் பகிரங்கமாக கண்டித்தவரும் முஸ்லிம் வழக்கறிஞரும், செயற்பாட்டாளருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா இவ்வா றான மற்றுமொருவராவார். தங்கள் நாடுகளில் நிலவும் அடக்குமுறைகள் காரணமாக பாகிஸ்தான், ஆப்கானிஸ் தான் போன்ற நாடுகளில் இருந்து தற்காலிக தஞ்சம் கோரி இங்கு வந்தவர்கள் மற்றும் அகதிகள் ஆகியோர் தாக்கு தல்களுக்குப் பின்னான சில நாட்களில் முஸ்லிம்கள் என்ற ஒரு காரணத்தால் வெளியேற்றப்பட்டு, மீண்டும் இடம்பெயர்க்கப்பட்டு வீடற்றவர்களாக்கப்பட்டனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான நீதி வழங்கப்படு வதில் இவர்களும், மறக்கப்பட்டவர்களும் மற்றும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களும் - உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் பாதிப்புக்குள்ளானவர்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

ஐந்து ஆண்டுகளாக புலனாய்வாளர்கள், வழக்கறிஞர் கள் மற்றும் நீதித்துறை உட்பட்ட இலங்கை குற்றவியல் சட்டக் கட்டமைப்புக்கு தாக்குதல்களுக்குக் காரணமா னவர்களை கைது செய்ய முடியவில்லை. பாதுகாப்புத் தரப்புக்கு சாட்சியமளிக்காமலேயே பாதுகாப்பு அமைச் சின் முன்னாள் செயலாளர் மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஆகியோர், அவர்களுக்கு எதிராக பதிவு செய் யப்பட்ட வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள னர். சட்டமா அதிபர் தாக்கல் செய்த ஏனைய குற்றவி யல் வழக்குகள் இன்னும் நடந்து வருகின்றன.

அக்கறையுள்ள சில பொதுமக்களால் தாக்கல் செய் யப்பட்ட, முன்னாள் ஜனாதிபதி மற்றும் சிரேஷ்ட அதி காரிகள் ஆகியோர் தாக்குதல்களைத் தடுக்காதமைக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்ற அடிப்படை உரிமை கள் வழக்குகளில் அவர்கள் இழப்பீடு வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சித்திரவதைக்கு இலக்கானவர்களுக்கு உச்ச நீதிமன் றம் வழங்கிய முந்தைய தீர்ப்புகளில் விதிக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைகளுடன் ஒப்பிடும்போது இந்தத் தொகை மிகச் சொற்பம் என்பதுடன் குற்றத்துக்கு பொறுப்பான யாரையும் சிறைப்படுத்த எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. 15 மாதங்கள் கடந்தும் உச்ச நீதிமன்றம் விதித்த இழப்பீட்டுத் தொகை இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை. ஜனாதிபதியின் விலக்குரிமையைக் காரணம் காட்டி அப்போதைய பிர தமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிர மசிங்கவை வழக்கிலிருந்து அகற்றுமாறு தீர்ப்புக்கு முன்பதாகவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அலட்சியமாக செயற்பட்டமைக்காக அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன விற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு உச்ச நீதிமன்றம் சிபாரிசு செய்திருந்தது. ஆயினும், அது இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. 2022 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாடு மற்றும் 2022 மே மாதத்தில் அவரைக் கைது செய்யுமாறு கோரி பொலிஸ்மா அதிபருக்கு சமர்ப்பிக் கப்பட்ட கடிதம் என்பவற்றுக்கும் எந்த எதிர்வினையும் ஆற்றப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதி யில் தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியதாகக் குறிப்பிட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவுக்கு எதிராக 2022 செப்டெம்பர் மாதம் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனிப் பட்ட முறைப்பாடு இதுவரை நிலுவையிலேயே உள்ளது. அப்போதைய பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னகோன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் மூலம் தாக்குதல்களைத் தடுப்பதில் அலட்சியமாக இருந்ததாகக் கண்டறியப்பட்ட போதி லும், அது குறித்து பொறுப்புக் கூறுவதற்குப் பதிலாக அவர் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைந்து முழுமையான நீதிக்கான வலுவான மற்றும் ஒன்றிணைந்த போராட்டங்களை முன்னெடுப்பதற்கு இதுவே சரியான தருணமாகும்.**





ஆரம்பத்தில் விசாரணைகளை மேற்பார்வையிட்ட முன்னாள் சட்டமா அதிபர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கள் தொடர்பாக ‘பெரும் சதி’ நடந்திருப்பதாக 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஊடகங்களுக்கு தெரிவித்தி ருந்தார். மேலும் மார்ச் 2022 இல், ஜெனீவாவில் நடத் தப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் போது, இந்தப் படுகொலை மாபெரும் அரசியல் சதியொன்றின் ஒரு பகுதியாகும் என விசாரணைகள் குறிப்பிடுகின்றன என்று கொழும்பு கத்தோலிக்க பேராயர் மல்கம் கர்தி னால் ரஞ்சித் அவர்கள் தெரிவித்தார். சர்வதேச உதவியு டனான சுதந்திரமான மற்றும் வெளிப்படைத்தன்மையு டனான விசாரணை ஒன்றிற்கு மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அழைப்பு விடுத்திருந்தார். தாக்கு தல்களில் தொடர்புபட்ட ஐஎஸ்ஐஎஸ் ஆதரித்த குற்றச் சாட்டின் பேரில் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட வழக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எனக்குத் தெரிந்தவரை இது இலங்கையில் போர்க் காலகட்ட த்தில் மற்றும் அதற்குப் பின்னரான காலகட் டத்தில் வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்ட மிகப்பெ ரிய படுகொலை சம்பவமாக இருந்த போதும் வேறு எந்த ஒரு நாடும் இது தொடர்பான குற்றவியல் வழக்குக ளைத் தொடரவில்லை.

உண்மையையும் நீதியையும் தேடுபவர்கள் பழிவாங் கல்களை எதிர் கொண்டுள்ளனர். கடந்த ஆண்டு நீர்கொ ழும்பில் நீதி கோரி நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் கூட்டத்தை நிறுத்த முயன்ற பொலிஸார் அதற்கு நீதிமன்றத் தடையுத்தரவைக் கோரிய போதும் தடையுத்தரவை வழங்க பதில் நீதவான் மறுத்துவிட்டார். கடந்த ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமன்று பொப்பிட் டிய புனித நிக்கோலஸ் தேவாலயத்தில் இருந்து கட்டு வாப்பிட்டி புனித செபஸ்டியன் தேவாலயம் வரை (தாக் குதல்களால் அதிகம் பாதிக்கப்பட்ட தேவாலயம்) உண்மை மற்றும் நீதி கோரும் வாகன அணிவகுப்பில் பதாகைகள், கறுப்புக் கொடிகள் மற்றும் ஒலிபெருக்கி கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கு பொலிஸார் தடை விதித்திருந்தனர். சத்தியம் மற்றும் நீதிக்காக குரல் கொடுக்கும் மூன்று முக்கிய கத்தோலிக்க பாதிரியார்கள் மீது கொழும்பு கத்தோலிக்க பேராயருக்கு எதிராகச் சதி செய்கிறார்கள் என ஊடக அறிக்கை ஒன்று குற்றம் சாட்டியது.

அரசியல் சதி என்று பகிரங்கக் குற்றச்சாட்டை முன் வைத்த, வெளிப்படையாக குரல் கொடுக்கக்கூடிய செயல் பாட்டாளரான ஒரு இளைஞரான ஷெஹான் மாலக்க கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர், யுத்தத்தின் போது, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கத்தோலிக்க மறை மாவட்டங்களில் அமைந்துள்ள குருநகர், அல்லைப் பிட்டி மற்றும் பேசாலை போன்ற இடங்களில் அமைந் துள்ள பல தேவாலயங்கள் கடற்படை மற்றும் ஆயுதப் படைகளால் தாக்கப்பட்டு நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் படுகாயமடைந்தனர். இவற்றுக்கும், மூன்று தசாப்த கால யுத்தத்தின் போதான சட்டத்திற்கு புறம்பான பல்லாயிரக்கணக்கான மரண தண்டனைகள் மற்றும் பலவந்தமான காணாமலாக்கப்ப டுதல்கள் உட்பட்ட பல கடுமையான குற்றங்களுக்கும் குற்றவியல் சட்ட ரீதியான பொறுப்புக்கூறல்களோ போதுமான இழப்பீடுகளோ இதுவரை வழங்கப்பட வில்லை. பாதிக்கப்பட்டவர்களில் கத்தோலிக்க தமிழ்ப் பாதிரியார்களான 1985இல் இராணுவத்தால் கொல்லப் பட்ட குச.மேரி பாஸ்டியன், 2006ஆம் ஆண்டு கடற்ப டைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையும் சோதனைச் சாவடியில் கடைசியாகக் கண்டதன் பின்னர் காணாமல் போன குச.ஜிம் பிரவுன் மற்றும் 2009ஆம் ஆண்டு யுத் தத்தின் இறுதியில் இராணுவத்திடம் சரணடைந்து பின்னர் காணாமல் போன பலரில் உள்ளடங்கி இருந்த குச. பிரான்சிஸ் ஜோசப் ஆகியோர் அடங்குவர்.

யுத்தத்தின் போது எல்.ரீ ரீ ஈ யினர் பள்ளிவாசல்கள் மற்றும் பௌத்த விகாரைகள் போன்றவற்றின் மீது தாக்குதல் நடாத்தி நூற்றுக்கணக்கான மரணங்களுக்கு வழிவகுத்தனர். இலங்கையில் போருக்குப் பிறகு சுவி சேஷக் கிறிஸ்தவர்களும் இஸ்லாமிய மற்றும் இந்து மதங்களைச் சேர்ந்த மக்களும் பல துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ள போதும் அவற்றுக்கான பொறுப் புக் கூறல்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. 2019ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறுக்கு முன்னதான 11 ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவ தேவாலய சேவைக ளுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டதுடன் 9 மாவட் டங்களில் குறைந்தது 13 தேவாலயங்கள் பாதிப்புக்குள் ளாயின. 2019ஆம் ஆண்டின் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் களுக்கு முன்னதாக கிறிஸ்தவர்களுக்கு எதிராக சுமார் 35 சம்பவங்கள் மற்றும் 70 அத்துமீறல்கள் பதிவாகியுள்ளன.

(16ம் பக்கம் பார்க்க)

# சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டு விழா!

## இன்று காரைதீவில் அங்குரார்ப்பணம்

காரைதீவு, ஏப். 23

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் துறவறம் பூண்டு இன்று 100 ஆண்டுகள் ஆகின்றன.

அதனையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்தும் நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமியில் காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் சுவாமி சிவானந்தரிடம் ஞான உபதேசம் பெற்று பண்டிதர் மயில்வாகனன் சுவாமி விபுலானந்தர் ஆனார்.

இன்றைய நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண வைபவம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெற இருக்கின்றது .

கலாசார சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு , சிறப்பிக்கவிருக்கிறார்.

திருமுன்னிலை அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பிக்கவிருக்கிறார்.

கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொள்கிறார்.

மேலும், சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், திருகோணமலை மாவட்டம் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனப்பணிப்பாளர் கலாநிதி திருமதி ப்ளோரன்ஸ் பாரதி கென்னடி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

அவ்வமயம், சுவாமிகளின் துறவறதின நூற்றாண்டு விழா பிரகடனம் அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட இருக்கின்றது.

(அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் நீதியை நிலைநாட்டுவதில் இரண்டு முக்கிய சவால்கள் உள்ளன. ஒன்று முழுமையான நீதியைப் பெறுவது, மற்றது, நீதிக்கான போராட்டங்களுக்கான ஒரு ஐக்கிய முன்னணியை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் உருவாக்குவது.

முழுமையான நீதி என்பதில் உண்மையைத் தேடுதல் மற்றும் குற்றவியல் ரீதியான, விசேடமாக சூத்திரதாரிகளின், பொறுப்புக்கூறல்கள் என்பவை உள்ளடங்கி இருத்தல் வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க இவை இரண்டுமே மிக முக்கியமாகும். நீதியானது இழப்பீடுகள் உட்பட உள மற்றும் உடல் ஆரோக்கியம், கல்வி, வாழ்வாதாரம் போன்றவற்றிற்கான உரிமைகளை உறுதி செய்யக்கூடிய நீண்டகால மற்றும் போதுமான மீள் கட்டமைத்தல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் சர்வதேச சமூகமும் இரு முனைகளிலுமே தோல்வியையே அடைந்துள்ளன. அனேகமான உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இழப்பீடுகள் குறித்து அவநம்பிக்கையைக் கொண்டிருந்தபோதிலும். கிறிஸ்தவ ஆலயங்களின் தலைவர்களின் மற்றும் சிவில் சமூகத்தின் குரலெழுப்பல்களானவை உண்மை, குற்றவியல் ரீதியான பொறுப்புக்கூறல்கள் மற்றும் இழப்பீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்துகின்றன.

கத்தோலிக்க திருச்சபை உள்ளிட்ட இலங்கையர்களுக்கு உள்ள மற்றுமொரு சவாலானது இன, மத, புவியியல் மற்றும் இன்னபிற பிரிவினைகளுக்கு அப்பால், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆகிய அனைவருக்கும் நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு கைகோர்ப்பதாகும்.

தமிழர்கள் தம் நீதிக்கான குரல் கொடுத்தல்களில் பெரும்பாலும் போர்க்கால அட்டூழியங்களில் கவனம் செலுத்தினாலும் சிங்களவர்கள் பெரும்பாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், பொருளாதார குற்றச் செயல்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றில் கவனம் செலுத்துகின்றனர். 2012ஆம் ஆண்டில் அன்றைய மன்னார் கத்தோலிக்க ஆயர், தமிழ் பேசும் கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் பலர், பல்லாயிரக்கணக்கான படுகொலைகள், காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் பிற குற்றங்களுக்கான நீதியைப் பெறுவதில் சர்வதேச பங்களிப்பைக் கோரியபோது, கர்தினால் ரஞ்சித் அவர்கள் “இவ்வாறான முயற்சிகள் இலங்கை மக்களின் அறிவுத்திறனை அவமதிக்கும் செயலாகும்” என்று குறிப்பிட்டு சர்வதேச தலையீட்டை எதிர்த்தார். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, உயிர்த்த தாக்குதல்கள் தொடர்பான நீதியைப் பெற சர்வதேச பங்களிப்பைக் கோருவதில் கர்தினால் முன்னணியில் நிற்கிறார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்து 5 வருடங்கள், யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் கடந்த 2 ஆண்டுகளாகக் காணப்படும் பொருளாதார நெருக்கடியானது பாரிய மக்கள் போராட்டங்களுக்குத் தூண்டுகோலாய் அமைந்து ஊழல் மிகுந்த, சர்வாதிகார மற்றும் இனவாத ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வந்தது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகியன இந்த வருடமும் அடுத்த வருடமும் நடாத்தப்படவுள்ளதுடன், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்களும் விரைவில் நடாத்தப்படலாம். சாட்சியங்களை சேகரிப்பதில் கவனம் செலுத்தல் பற்றிய இலங்கையின் பொறுப்புக்கூறல் குறித்த செயல் திட்டத்தை புதுப்பித்தல் சம்பந்தமாக இந்த வருட இறுதியில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முக்கிய அமர்வின் போது பரிசீலிக்கப்படவுள்ளது. அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைந்து முழுமையான நீதிக்கான வலுவான மற்றும் ஒன்றிணைந்த போராட்டங்களை முன்னெடுப்பதற்கு இதுவே சரியான தருணமாகும். ●

